

வந்தனம்!
நீங்கள்
லைப்பாய் தேகாப்பியாசம்
செய்தீர்களா?
ஒரு தேசமக்களின் சிறப்பு அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பொறுத்தேயிருக்கிறது. திட ஆரோக்கியத்தைப் பெறுவதற்கான மார்க்கம் தவருமல் தேகாப்பியாசம் செய்வதும், சரீர சுத்தத்தை கவனிப்பதும், சத்துள்ள சாதாரண உணவை உட்கொள்வதும் தான். உங்கள் தேகசுத்தத்திற்கு லைப்பாய் சோப் உபயோகியுங்கள். அதிலடங்கியுள்ள விசேஷ சுகாதாரப் பொருள் உங்கள் உடலை நோய்களிலிருந்து பாதுகாக்க உதவுகிறது.
லைப்பாய் தேகப் பயிற்சிப் படங்களுக்கு Dept. A411 P.O. Box 758, Bombay, 1 என்ற விலாசத்திற்கு இரண்டணு ஸ்டாம்பு அனுப்புங்கள்.
LIFEBUOY
SOAP
லைப்பாய்
சோப்புடன்
துவக்கும் நாளே நன்னாள்
L. 92-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

வெள்ளித் திரைக்குத் தயார்!

பதி பிக்சர்ஸாரின் அதி அற்புத ஈடிலா சிருஷ்டி!

"ஜீவ ஜோதி"

★

செருகளத்தூர் சாமா
பி.எஸ்.சீனிவாச ராவ்,பி.ஏ.
எம். எல். பதி
கே. சஹாதேவன்
ஏ. எம். ஏ. துரை
கே. ஆர். வி. ராவ்

★



★

டி. பி. ராஜலக்ஷ்மி
எம். வி. நவநீதம்
கே. கே. கிருஷ்ணவேணி
எம். ஜயந்தி
டி. சக்கு
பி. எஸ். ஜெயா

★

முதலிய உங்களுக்குப் பிடித்தமான நடிகர்கள் நடித்தது

கதை: எம். எல். பதி **வசனம்: பிரதாபன்**

பாட்டுகள்: பி. ராஜகோபாலய்யர் & ஏ. ஆர். சாரங்கபாணி பிள்ளை

பாட்டு டைரக்ஷன்:
நீநு மஜும்தார் & தஞ்சாவூர் ஜனார்த்தன்

நடனம் டைரக்ஷன்:
கே. மண்டலி & மிஸ். குமுதினி பாய்


படப்பிடிப்பு:
ராமராஜ்யா புகழ் கே. குகடே

உதவி டைரக்ஷன் & புரொடியூசர்
கே. எம். முல்தானி பி.ஏ.

பம்பாய் பிரகாஷ் ஸ்டுடியோவில் தயாரித்தது

விநியோகத்துக்கும் இதர விவரங்களுக்கும்:
பதி பிக்சர்ஸ், 4-வது மாடி, கர்மாலி பில்டிங், சர். பி. மேதா ரோடு, போர்ட், பம்பாய்
பிராஞ்சு: 2/14, பிச்சு பிள்ளை தெரு, மயிலாப்பூர், மதராஸ்


நம் போன்றவர்களுக்கேற்ற
முதல்தரமான ஸிகரட்
நம்பர் டென்
வெர்ஜினியா
NUMBER
TEN
NTK 192 TA



ரெக்ஸோனாவினால் சரும ஆரோக்கியமேற்படுகிறது

... சரும ஆரோக்கியமே அழகு

அழகான மேனியின் இரகசியம் சரும சுகமே. உங்கள் சருமம் ஆரோக்கிய முடையதாக இருக்காவிட்டால் அழகு ஏற்படாது. கேடில் எனும் மருந்து சேர்த்ததும், விரைவில் நுரையைத் தருகின்றதுமான ரெக்ஸோனாவின் உதவியை பயன் படுத்திக்கொள்ளுங்கள். இந்த ஆன்டி செப்டிக்கும், குணமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்தை, ரெக்ஸோனாவின் நுரை சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டுசேர்த்து, மலினங்களை அகற்றி சுத்தம்செய்து சருமத்திற்கு சுகத்துடன் வனப்பையுமளிக்கிறது. மேனி அழகிற்கு சருமசுகமே அடிப்படை என்பதற்கும், ரெக்ஸோனாவின் மருந்து கலந்த நுரை சௌந்தர்ய மேற்பட உதவுகிறது என்பதற்கும் சந்தேகமே கிடையாது.

ஆடவருக்கு ரெக்ஸோனா: ரெக்ஸோனா பெண்களுக்காகமட்டும் வழங்கப்படும் சோப் பெனக் கருதாதீர்கள். அது ஆடவருக்கும் மிக அவசியமான சோப். ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில் ஆன்டிசெப்டிக்கும், குணமளிக்கும் தன்மை வாய்ந்ததுமாதலால் சருமத்தைப் பாதுகாக்கிறது. சரும சுகத்தினாலேற்படும் செழித்த ஆரோக்கியம் ஆடவருக்கு தனிப்பெருமையைக் கொடுக்கும்.

குழந்தைகளுக்கு ரெக்ஸோனா: ரெக்ஸோனாவின் மிருதுவான நுரை குழந்தையின் இளம் சருமத்தைத் தேற்றுகிறது. கேடில் மருந்து சிறு [illegible] எரிச்சல் அரிப்பு முதலானவைகளிலிருந்து காப்பாற்றுகிறது. குழந்தைகளுக்கு மிக உத்தமமான சோப்பே உகந்ததாகும்.

★ ரெக்ஸோனாவிலுள்ள கேடில் சுகமளித்துப் போஷிக்கும்தைலங்கள் சேர்ந்தவிசேஷ மருந்து. அது சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானது.



RP. 30-23 TM

REXONA PROPRIETARY LIMITED

கல்கி

பொருளடக்கம்

மலர் 6
இதழ் 51

1947 ஜூலை 20

சர்வஜித்
ஆடி 4

முப்பது வருஷத்துக்கு முன்னும் நம்முடைய ஒப்புயர்வற்ற கவிஞராகிய சுப்பிரமண்ய பாரதியார் பாரத நாட்டுப் பெண்கள் இருந்த நிலைமையை எண்ணி எண்ணி மனம் நொந்தார்; அவர்கள் விடுதலையடைவதற்கு வழி இல்லையா வென்று நைந்து நைந்து உருகினார். அவர்கள் சீரும் சிறப்புமடைந்து, பொது வாழ்வில் ஆண்களுக்குச் சமமாக முன்னேற வேண்டும் என்பதற்காக 'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!' என்பது போன்ற பல அருமையான கவிதைகளைப் புனைந்து பெண்கள் — விடுதலைச் சங்கை முழக்கினார்.



பாரதியார் இன்று உயிரோடிருந்து, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் ருஷ்யாவுக்கு இந்தியாவின் பிரதம ஸ்தானாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் செய்தியையும் காதிலே கேட்டிருந்தால், அவருக்கு எவ்வளவு ஆனந்தம் உண்டாகியிருக்கும்!

இதுவரை உலகத்தில் எந்த தேசமாவது ஒரு பெண்மணியை ருஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளில் ஸ்தானாதிபதிப் பதவிக்கு நியமித்ததில்லை. அந்த கௌரவம் முதன் முதலாக இந்தியாவுக்குத்தான் கிடைத்திருக்கிறது என்பதை அறியும் போது, இந்திய மக்கள் பெருமைப்படாமலிருக்க முடியாது.

சென்ற வருஷம் ஐக்கிய தேச மகாசபையில் ஜெனரல் ஸ்மட்ஸை எதிர்த்து ஸ்ரீமதி பண்டிட் இந்தியாவுக்குச் சம்பாதித்துக் கொடுத்த மாபெரும் வெற்றியைப் பார்க்கும்போது, ருஷ்யா என்ன — இன்னும் எவ்வளவு பெரிய தேசத்திற்கு வேண்டுமானாலும் அவர் ஸ்தானாதிபதியாகப் போகக் கூடியவர் என்பது விளங்கும். ஆனால், தற்போது ருஷ்யாவைவிடப் பெரிய தேசம் எதுவும் உலகத்தில் இல்லாததால், நமது தலைவர்கள் அவரை ருஷ்யாவுக்கே அனுப்பிவைத்திருக்கிறார்கள்.

ஸ்ரீமதி பண்டிட் தம்முடைய பதவியை வெகு நன்றாக நிர்வகித்து, ஐரோப்பிய ராஜதந்திரிகளுக்குள்ளே மிகச் சிறந்த பெயர் எடுத்து, அதன் மூலம் இந்தியாவின் கௌரவத்தை இன்னும் பல மடங்கு உயர்த்துவார் என்பதில் சந்தேகம் இல்லை.

தமிழ் மக்களின் சார்பாக ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டை வாழ்த்தி, வெற்றி கூறி, அவருக்கு விடை கொடுத்து அனுப்பி வைக்கிறோம்.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதி | இதழ் 51

என்ன சேதி?

தூக்கம் கலைந்தது!

தமிழர்கள் முக்கியமான சமயங்களில் கொஞ்சம் தூங்கிக் கொண்டிருப்பது வழக்கம். தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு விட்டால், அப்புறம் அவர்களைக் கட்டிப் பிடிக்க யாராலும் முடியாது.

சென்ற இந்திய சட்ட சபைத் தேர்தலின் போதும், சென்னை மாகாண சட்ட சபைத் தேர்தலின்போதும் தமிழர்கள் தூங்கிக் கொண்டிருந்துவிட்டுச் சென்னைப் பட்டணத்தைக் கோட்டை விட்டது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இது சம்பந்தமாகவே நாமும் 'பட்டணம் பறி போகிறது' என்பதாகத் தலையங்கம் எழுதியிருந்தோம். மேற்படி கோட்டையையும் கேந்திர ஸ்தானத்தையும் அச்சமயம் கைவிட்ட தமிழர்கள் இப்போது விழித்துக் கொண்டு விட்டார்கள். தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும், சென்னை நகரம் தமிழ் மக்களுக்கே உரியதாகும் என்பதைப் பற்றித் தீவிரமாகக் கிளர்ச்சி நடந்து வருகிறது. சமீபத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், திருநெல்வேலியில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில், "எங்கே, ஆந்திரர்கள் சென்னையில் கை வைக்கட்டும், பார்ப்போம்! சென்னை நகரம் தமிழருக்கே உரியது. வேறு யாராவது உரிமை கொண்டாடினால் தமிழன் தன் உரிமையை நிலை நாட்ட இரத்தத்தைச் சிந்துவான்" என்று கூறினாராம்.

பெரிய ஏமாற்றம்

தமிழ் மக்களின் அபிப்பிராயம் என்ன வென்பதை இவ்வளவு அழுத்தந் திருத்தமாக எடுத்துச் சொன்னது ரொம்பவும் பாராட்டத்தக்க விஷயமேயாகும். ஆனால், தமிழர்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது அவர்களிடமிருந்து சென்னை நகரத்தைத் தட்டிப் பிடுங்கிக்கொண்டு விடலாம் என்று நினைத்திருந்த ஆந்திரர்களுக்கு மேற்படி செய்தி ரொம்ப ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. ஆகவே, அவர்களுடைய தலைவர்கள் ஆந்திர தேசத்தைச் சுற்றிச் சுற்றி வந்து, "பட்டணமு மனதே மனதி! மனதே மனதி!" என்று ஆத்திரத்துடன் கோஷிக்கிறார்கள். இவர்களிலே மாஜி பிரதம மந்திரி பிரகாசமும் ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவராகிய ஸ்ரீ என். ஜி. ரங்காவும் முக்கியமானவர்கள். "சென்னை நகரத்தை விடமாட்டோம்" என்கிறார் பிரகாசம். "ஒவ்வொரு அடி நிலத்துக்கும் நாங்கள் உயிரைக் கொடுத்துப் போராடுவோம்" என்கிறார் ஸ்ரீ ரங்கா.

ஆனால் இந்தக் காரியத்துக்காக இரத்தத்தைச் சிந்தவேண்டிய அவசியமோ, அல்லது ஸ்ரீ ரங்காவும் பிரகாசமும் சொல்லுவது போல உயிரைக் கொடுத்துப் போராட வேண்டிய அவசியமோ சிறிதும் இல்லை. பார்ப்பதற்குத் தெளிவான இரண்டு கண்களும், சிந்திப்பதற்குக் கொஞ்சம் பகுத்தறிவும் இருந்தால் சென்னை நகரம் யாருடையது என்பது நன்றாகத் தெரியும். "சரித்திரப் பூர்வமாகப் பார்த்தால், சென்னை நகரம் ஆந்திர நாட்டைச் சேரும்" என்று சொல்லுவதெல்லாம் உபயோகமற்ற வாதம். சரித்திர பூர்வமாகப் பார்க்கப் போனால், சென்னை நகரம் மாத்திரமல்ல, ஆந்திர நாடு முழுவதையுமே தமிழகத்துடன் சேர்க்க வேண்டியதாக ஏற்பட்டு விடும்!

சரியல்ல; பலிக்காது!


ஆந்திர மக்களுக்குத் தங்களுடைய நாட்டை விரிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கம் இருக்குமானால், அவர்கள் மேற்படி அநியாயக் கோரிக்கையை விட்டு விட்டு,

ஹைதராபாத் சமஸ்தானத்திலுள்ள தெலுங்கானுப் பகுதியைத் தங்களுடைய நாட்டுடன் சேர்க்க பலமாகக் கிளர்ச்சி செய்வதே நேர்மையும் முறையும் நியாயமு மாகும். தெலுங்கானுவில் வசிக்கும் மக்களில் பெரும்பாலோர் ஆந்திரர்கள். அதை விட்டுவிட்டு, சென்னை நகரத்துக்கு உரிமை கொண்டாடுவது சரியல்ல வென்பதையும் அது பலிக்கவும் பலிக்காது என்பதையும், ஆந்திரர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.


பூமி ஆள்வார்!

காயிதே ஆஜம் முகம்மதலி ஜின்னு, கவர்னர்-ஜெனரல் முகம்மதலி ஜின்னுவாக ஆனதுபற்றி முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த சிலர் பிரமாத குதூகலப்படுகிறார்கள். மற்றவர்களிலே சிலர், "பாகிஸ்தானத்துக்கு மாத்திரம் ஜனுப் ஜின்னு கவர்னர் ஜெனரல்; இந்தியாவுக்கு மட்டும் பழைய மௌண்ட்பேட்டன் தானு இது என்ன அநியாயம்!" என்று வருத்தப்படுகிறார்கள்.

இதில் குதூகலப்படுவதற்கோ வருத்தப் படுவதற்கோ இடம் ஒன்றும் இல்லை. பார்க்கப் போனுல், கவர்னர் ஜெனரல் பதவி பழைய பிரிட்டிஷ் ஆட்சியின் சின்னமேயாகும். அப்படியிருக்கும்போது, கவர்னர் ஜெனரல் இந்தியராக இருந்தால் என்ன, பிரிட்டிஷாராக இருந்தால்தான் என்ன? இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். ஜனுப் ஜின்னுவை கவர்னர் ஜெனரலாக நியமித்தது பிரிட்டிஷ் சர்க்கார். ஆனுல், மௌண்ட் பாட்டனை இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமித்தது பிரிட்டன் அல்ல; — காங்கிரஸ்! அதாவது காரியாம்சத்தில் அப்படித்தான் ஏற்படுகிறது. இது காங்கிரஸின் கௌரவத்தை உயர்த்தக்கூடிய காரியமே யல்லவா? "பொறுத்தார் பூமியாள்வார்" என்பது இச்சந்தர்ப்பத்துக்கு மிகப் பொருத்தமான பழமொழியாகும்.


உங்கள் அன்புள்ள,


ஜின்னாவும், ஜின்னாவும்!




வைஸராய் மவுண்ட்பேட்டன் ஒரு ஜின்னாவைச் சமாளிப்பதற்கே கஷ்டப்பட்டுப் போனார். இனி அவர் இரண்டு ஜின்னாக்களைச் சமாளித்தாக வேண்டும்!
ஜின்னா - கவர்னர் ஜெனரல்
ஜின்னா - முஸ்லிம் லீக் தலைவர்

அன்றும் இன்றும்

- சாஸ்திரி





அந்தகாரம் ஒழிந்தது

ராமாயணத்தில் ஒரு சம்பவம்:

இந்திரஜித்து ஏவிய நாகபாசத்தினால் ஆஞ்சநேய மூர்த்தி கட்டுண்டார்.

போர்முனைக்கு வந்திருந்த ராக்ஷஸ கணங்களுக்கெல்லாம் அதைக் கண்டதும் ஒரே குதூகலமாய் விட்டது. அவர்கள் எல்லோரும் கொக்கரித்துக் கொண்டு நாகபாசத்துக்கு உதவி புரிவதற்காக, அதாவது நாகபாசம் நழுவி விடாமல் பாதுகாப்பதற்காக ஓடோடியும் வந்தார்கள்!

சணல் கயிறு, சப்பாணிக் கயிறு, கந்தாழை நார், கந்தல் துணி முதலியவைகளை யெல்லாம் போட்டு நாகபாசத்தின் மேல் கட்டினார்கள்.

நாகபாசத்தின் வேலையை மேற்படி கயிறுகள் எல்லாம் ஏற்றுக் கொண்டு விட்டதால், தன் அலுவல் முடிந்து விட்டது என்று நாகபாசம் நழுவி விழுந்து விட்டது!

பிறகு, வெறும் கயிறுகளை யெல்லாம் சுக்கு நூறாக அறுப்பதுதானா ஆஞ்சநேயருக்கு ஒரு பிரமாதமான காரியம்?

* * *

அன்னையின் அடிமை விலங்கு நொறுங்கி பல மாதங்களாகி விட்டன.

எனினும், சணல் கயிறு, சப்பாணிக் கயிறு போன்ற பல தளைகள் பாரத நாட்டைச் சுற்றிக் கொண்டு தொல்லை விளைவித்துக் கொண்டிருந்தன.

அந்தத் தளைகளும் இப்போது அறுபட்டு விட்டன.

எனவே, இந்திய அரசியல் நிர்ணய சபையைப் பரிபூரண அதிகாரமுள்ள ஒரு மகாசபை அல்லவென்று இனி யாரும் ஆட்சேபிக்க முடியாது.

அது பரிபூரண பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு மகாசபை என்பதையும் இனி யாரும் மறுக்க முடியாது.

அச்சபையைக் கலைத்துவிட வேண்டும் என்று இனி யாரும் ஆர்ப்பாட்டம் செய்வதும் முடியாத காரியம்.

ஏனெனில் அதைக் கலைத்துவிட வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்த முஸ்லிம் லீக்கர்கள் கூட இப்போது அச்சபைக்கு வந்து விட்டார்களல்லவா?

எனவே, எவ்வித இடையூறும் முட்டுக் கட்டையுமின்றி இந்தியாவின் அரசியலை நிர்மாணிக்கப் போவதும், சுதந்திர இந்தியாவின் பார்லிமெண்டாக விளங்கப் போவதும் இந்திய அரசியல் நிர்ணய மகா சபைதான் என்பது இப்போது நிச்சயமாகி விட்டது.

சர்ச்சில், ஜின்னா கோஷ்டியினர்கூட இதை ஒப்புக்கொண்டு விட்டார்கள்!

இந்திய அரசியல் நிர்ணய சபைக்கு எவ்வளவு அதிகாரம் இருக்க வேண்டும் என்று நமது மாபெரும் தலைவர்கள் கோரினார்களோ, அவ்வளவு அதிகாரமும் இப்போது அதற்குக் கிடைத்து விட்டது.

இனி எந்த சக்தியும் அதை அசைக்க முடியாது.

* * *

நாகரிக தேசங்கள் என்று கூறப்படும் மேனாடுகளில் எல்லாம் பண்டைய காலத்தில் குற்றவாளிகளைத் தண்டிக்க வித விதமான கொடிய அநாகரிகமான முறைகளை அனுஷ்டித்து வந்தார்கள்.

புராதன ரோமியர் சட்டப்படி கொடிய குற்றம் செய்தவருக்கு விசித்திரமான ஒரு தண்டனை விதிக்கப்பட்டு வந்தது.

அதாவது, அந்தக் குற்றவாளியை ஒரு பையில் போட்டு அவனுக்குத் 'துணை'யாகப் பைக்குள் ஒரு குரங்கையும், ஒரு பாம்பையும், ஒரு சேவலையும் விட்டுவிடுவது! பின்னர் அந்தப் பையை வெள்ளப் பெருக்

கொடுத்து ஓடும் ஆற்றில் எறிந்து விடுவது! இதுதான் தண்டனை!!

அவனுக்கு இதைக் காட்டிலும் நரக வேதனை வேறென்ன வேண்டும்?

கற்பனைக்கும் எட்ட முடியாத மேற்படி வேதனையை அனுபவிக்கும் அவனைப் பையிலிருந்து யாராவது விடுவித்தால், அப்போது அவனுடைய குதூகலத்தை வர்ணிக்க முடியுமா!

அதுபோலவே, பிரிட்டிஷார் தயாரித்த 1946 மே 16-ந் தேதி திட்டம் இந்தியாவை, சுதந்திரம் கோரிய குற்றத்துக்காக, அத்தகைய நரக வேதனைக்கு உட்படுத்தி விட்டது என்றும், ஆனால் சென்ற ஜூன் 3-ந் தேதி திட்டமானது, அத்தகைய வேதனையி லிருந்து இந்தியாவை மீட்டிருக்கிறது என்றும் ஸ்ரீ கே. எம். முன்ஷி. சென்ற திங்கட்கிழமை ஆரம்பமான அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் வர்ணித்தார்.

முஸ்லிம் லீக்கர்களும் பிரசன்னமாகியிருந்த அக் கூட்டத்தில் ஸ்ரீ முன்ஷி அவ்வாறு கூறியது உசிதமா. அல்லவா என்ற விஷயத்தில் அபிப்பிராய பேதம் ஏற்படலாம்.

என்றாலும், மேற்படி வர்ணனை முற்றிலும் பொருத்தமானது என்பதில் மாத்திரம் அபிப்பிராய பேதம் எதுவும் ஏற்படுவதற்கில்லை.

* * *

அரசியல் நிர்ணய மகா சபையின் அலுவல்களுக்கு இனி எவ்வித தடங்கலும் உண்டாக இடமில்லை.

இதுவரை வெளியாகியுள்ள மேற்படி சபைக் கமிட்டிகளின் அறிக்கைகளிலிருந்து சிறுபான்மையோரின் உரிமைகளுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாது என்பது தெரிகிறது.

மற்றும் சர்வஜன வோட்டுரிமையை ஆதாரமாகக் கொண்டே சர்க்கார் நிர்வாகம் நடைபெறும் என்றும் நிர்ணயமாகியிருக்கிறது.

அதாவது, இந்தியாவில் ஏற்படப் போகும் சுதந்திர சர்க்காரில், ஜாதி மத வகுப்பு வேற்றுமையின்றி எல்லோருக்கும் பங்கு இருக்கும்.

வோட்டுரிமை பெறும் விஷயத்தில் பணக்காரன் — ஏழை, படித்தவன் — பாமரன், முதலாளி — தொழிலாளி என்ற வேற்றுமைக்கும் இடமிராது.

முன்பு இருந்து வந்தது போன்று, ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து முகம் தெரியாத ஒருவர் கவர்னர் என்று திடீரென்று வந்து குதித்துவிட முடியாது.

ஒவ்வொரு மாகாணத்திலும் கோடிக் கணக்கான மக்களின் அன்புக்குப் பாத்திரரான தலைவர் நிலைதான் கவர்னராக வர முடியும்.

வயது வந்த சகலருக்கும் வோட்டுரிமை அளிப்பது என்ற நியதியே ஜனநாயகத்தின் உயிர் நாடி எனலாம். அந்த நியதி சுதந்திர இந்திய அரசியலில் இடம் பெறப்போவது மிக மிக முக்கிய விஷயமாகும்.

எனவே, சுதந்திர இந்தியாவின் எதிர்கால அரசியலில் கலப்பற்ற ஜனநாயக மணம் கமழும் என்பதில் அணுவளவும் சந்தேகமில்லை.

சென்ற ஜூன் மாதம் 3-ந் தேதி திட்டம் வெளியானதி லிருந்து இங்கிலாந்திலும் இந்தியாவிலும் அதி துரிதமாகக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

சர்ச்சில் கோஷ்டியினரின் முட்டுக் கட்டைகளும், இந்திய அரசியல் நிர்ணய சபையைப் பிணைத்திருந்த கட்டுப்பாடுகளும் மறைந்து விட்டதே மேற்படி நிலைமைக்குக் காரணமாகும்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இந்திய சுதந்திர மசோதா நிறைவேறிச் சட்டமாகி விட்டது.

இந்திய அரசியல் நிர்ணய சபையையே அங்கீகரிக்க முடியாது என்று கூறி வந்த சர்ச்சில் கோஷ்டியினர், அதாவது கன்சர்வேடிவ் கட்சியினர் கூட பார்லிமெண்டில் சுமுகமாகப் பேசியிருக்கிறார்கள்; இந்திய சுதந்திர மசோதாவை ஆதரித்தும் இருக்கிறார்கள்.

அது மாத்திரமல்ல; இந்தியத் தலைவர்களுக்கு வாழ்த்துக்கூடக் கூறியிருக்கிறார்கள்!

இந்தியாவின் சுதந்திரத்துக்குக் கன்சர்வேடிவ் கட்சியினர் வாழ்த்துக் கூறுவார்கள் என்று இரண்டு மாதங்களுக்கு முன் யாராவது கனவிலும் நினைத்திருப்பார்களா?

* * *

பார்லிமெண்டு விவாதத்தில் இரண்டொரு முக்கிய அம்சங்களைக் குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

"ஜனங்களுக்குச் சுதந்திரம் கூடாது, எங்களுக்குத்தான் சுதந்

திரம் வேண்டும்'' என்று கூத்தடித்து வரும் இந்திய மண்டலாதிபதிகளுக்குப் பிரதம மந்திரி ஆட்லி புத்திமதி கூறியிருக்கிறார். ''இந்திய சமஸ்தானங்கள் இந்தியா அல்லது பாக்கிஸ்தான் ஏதாவது ஒன்றில் சேர்ந்துதான் ஆக வேண்டும். வேறு விதமாக அவர்கள் முடிவு செய்யக் கூடாது. வேறுவிதமாக அவர்கள் முடிவு செய்ய நினைத்தால், 'அவசரப் படாதீர்கள், பொறுத்துச் செய்யுங்கள்' என்றுதான் நான் சொல்லுவேன்'' என்று ஆட்லி இந்திய மன்னர்களை எச்சரித்திருக்கிறார்.

''இந்தியாவின் ஒற்றுமை சிதறியதற்குக் காரணம் தனித் தொகுதி சாபக்கேடுதான். எனவே, இனி மேலாவது இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும் தனித் தொகுதி ஒழிந்து கூட்டுத் தொகுதி ஏற்படும் என்று நம்புகிறேன்'' என கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த ஸர் வால்டர் ஸ்மைல்ஸ் ஒப்புக்கொண்டிருப்பது பாராட்டத் தக்கதாகும்.

''இந்தியா விஷயத்தில் நாம் பல தவறுகள் செய்திருக்கிறோம்; படு மோசமான தவறுகள் செய்திருக்கிறோம்'' என்றும் சில பிரமுகர்கள் பச்சாத்தாபப்பட்டு, அதற்கெல்லாம் இந்திய சுதந்திர மசோதா ஒரு பிராயச்சித்தமாகும் என்ற முறையில் பேசியிருக்கிறார்கள்.

சகல கட்சியினரும் ஏகோபித்துக் கரகோஷம் செய்ய, ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் உணர்ச்சிப் பெருக்குடன் பேசியிருப்பதை இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை.

''ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி இந்தியாவின் சுதந்திர யாத்திரை ஆரம்பமாகின்றது. அது இந்தியாவுக்குச் சரித்திரப் பிரசித்தமான ஒரு சுதினமாக இருக்கும்.

''இந்தியர்கள் வெகு துரிதமாக முன்னேறிச் செல்லுவார்களாக!

''அவர்களுக்குக் கஷ்டம் ஏதாவது நேர்ந்தால் கை கொடுத்து உதவி புரிய நாங்கள் எப்போதும் தயாராக இருப்போம்.

''இந்தியத் தலைவர்கள் பல வருஷங்களாகப் போராடி யிருக்கிறார்கள். பல கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள்.

''உலக அமைதிக்கும் முன்னேற்றத்துக்கும் நம்முடன் உழைக்கும் சகபாடிகள் என்ற ஹோதாவில் அந்தத் தலைவர்களை இப்போது நாங்கள் வணங்குகிறோம்.

''இந்தியாவில் அந்தகாரம் அகன்று இப்போது சுதந்திரமும் சுபிட்சமும் உதயமாகியிருக்கின்றன. அந்த சுதந்திர, சுபிட்ச சூரியன் அந் தேசத்தில் எந்தக் காலத்திலும் அஸ்தமிக்காமல் பிரகாசித்து வருமாக!''

முன்னர் இந்தியா முழுதும் யாத்திரை செய்த பிரிட்டிஷ் மந்திரி கோஷ்டியில் ஒருவரும், தற்போது பிரிட்டிஷ் வர்த்தக மந்திரியுமான ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் மேற்கூறிய விதம் பேசியிருப்பதன் மூலம் பிரிட்டனுக்கு ஓரளவு நற்பெயரைத் தேடிக் கொண்டிருக்கிறார்.

• • •

இந்தியாவில் அந்தகாரம் அறவே அகன்று சுதந்திர சூரியன் பிரகாசிக்கின்றான்.

தியாகம், கஷ்டம் என்பதையே அறியாத முஸ்லிம் லீக்கர்கள் பாக்கிஸ்தான் பெற்றிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் ஏஜண்டுகளிடம் சலாம் போட்டுக் கொண்டிருந்த சமஸ்தானங்கள் 'சுதந்திர' கோஷம் செய்கின்றன.

''நாங்கள் ஜனநாயக ஆஷாடபூதிகளல்ல, உண்மையான ஜனநாயகவாதிகள்தான் என்பதை இனியாவது உலகம் அறிந்து கொள்ளட்டும்!'' என்று பிரிட்டிஷார் பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள்.

இதற்கெல்லாம் காரண புருஷர்கள் யார்?

மகாத்மா காந்திதான்; பண்டித நேரு, சர்தார் பட்டேல், ராஜாஜி, ராஜேந்திர பிரசாத், மௌலானா ஆஸாத் முதலிய மாபெரும் தலைவர்களும், மற்றும் தேசத்துக்காகத் தியாக அக்னியில் மூழ்கிய லக்ஷோபலக்ஷம் தொண்டர்களும்தான்.

எனவே, அத்தகைய மகிமை வாய்ந்த தலைவர்களுக்கு ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் பிரிட்டிஷ் பார்லிமெண்டு மகாசபையில் வணக்கம் செலுத்தி யிருப்பது எவருக்கும் மயிர் சிலிர்க்கும் ஒரு சம்பவமாகும்.

நமது தலைவர்கள் இணையற்ற தியாகங்கள் செய்திராவிடில் இன்றைய நிகழ்ச்சிகளுக்கே இட மிராமற் போயிருக்கும்.

பகீரதன் எவ்வளவோ கஷ்டப்பட்டு, எவ்வளவு காலமோ தவம் கிடந்து கங்கையைக் கொண்டு வந்தான். நமது மகிமை வாய்ந்த தலைவர்களோவென்றால், எத்தனையோ தியாகங்கள் செய்து, எத்தனையோ வருஷங்கள் தவம் புரிந்து சுதந்திர சூரியனையே கொண்டு வந்து விட்டார்கள்.

இனி அந்தகாரம் ஒழிந்தது!

வட்ட மேஜை

'கல்கி' ஆசிரியரவர்களுக்கு,

தற்போது அனுஷ்டானத்தில் இருந்து வரும் சர்க்கார விடுமுறை நாளாகிய ஞாயிற்றுக்கிழமை ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்ட நாளையால், நானது 1947 ஆகஸ்டு 15-ந் தேதி வெள்ளிக்கிழமை இந்தியரின் கைக்கு அதிகாரம் மாறியதும் மேற்படி ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதை உடனே ரத்துச் செய்து விட வேண்டும் என்றும் ஞாயிற்றுக்கிழமைக்குப் பதில் வெள்ளிக்கிழமை விடுமுறை தினம் என்று அனுஷ்டித்து வரும்படி தலைவர்கள் தெரிவிக்க வேண்டும் என்றும் விரும்புகிறேன். ஆங்கிலேயர் கிறிஸ்தவர்களாதலால் ஞாயிற்றுக்கிழமை தினம் காலை மாலை இரண்டு வேளைகளிலும், மாதா கோவிலுக்குச் செல்கிறார்கள். நாம் என்ன செய்கிறோம் என்றால் எந்த சினிமாக் கொட்டகைக்குப் போகலாம் என்று எண்ணுகிறோம். நம் நாட்டில் வெள்ளிக்கிழமைகளில்தான் கோவில்களில் விசேஷ அலங்காரங்களும், மங்கள காரியங்களும் நடக்கின்றன. அன்றுதான் கோவிலுக்குப் போக வேண்டும் என்று புறப்படுகிறார்கள். வெள்ளிக்கிழமை அம்மனுக்கு உகந்த நாளாகிறது. நாமெல்லோரும் பாரதத் தாயின் புதல்வர்கள் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறோம். தாய்க்கு உகந்த நாளாகிய வெள்ளிக்கிழமை விடுமுறையாக வந்தால் நாம் நமது தாயைக் கௌரவித்தவர்களாகிறோம். ஆங்கிலேயரின் ஆட்சி முடிந்த தினம் ஆகஸ்டு 15-ந் தேதி வெள்ளிக்கிழமை என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கும் சௌகரியமாக இருக்கும். நமது சர்க்காரில் சேவை செய்யும் மைனாரிட்டிகளாகிய முஸ்லிம்களுக்கும் வெள்ளிக்கிழமை யன்று அவர்கள் பிரார்த்தனை செய்வதற்கு விடுமுறை கொடுக்கப்பட்டிருக்கிறோம் என்ற பெருமைப்படவும் இடம் உண்டாகும். ஆகையினால் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதை மாற்றி வெள்ளிக்கிழமை விடுமுறை நாள் என்று கொண்டு வரும்படி நமது மாபெருந் தலைவர்களுக்கு எடுத்துக் கூறும்படி வேண்டிக் கொள்கிறேன்.

சுதந்திரப் பிரியன்,

எம். எஸ். ரங்கநாதன்.

வீணை இசை

"இன்னிசை வீணையர் யாழினர் ஒர் பால்" என்று மணிவாசகப் பெருமானின் திருவாசகம் கூறுகிறது. "இல்லறம் என்பது வீணையின் நாதம்" என்று இந்தக் காலத்துக் கவி ஒருவர் எழுதுகிறார்.

("ஆனால் பல இல்லங்களில் இப்போது கேட்பது மத்தளச் சத்தம் அல்லவா?" என்று ஒரு விகட கவி கூறுகிறார்.)

ஆகக்கூடி, ஆதிகாலத்திலிருந்து இன்று வரை வீணை வாத்தியத்தின் சிறப்பைத் தமிழர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள் என்று ஏற்படுகிறது.

சங்கீதக் கருவிகளின் ராஜா நாதஸ்வர வாத்தியம் என்றும், ராணி வீணை என்றும் சொல்வதுண்டு. மனிதக் குரலுக்கு அடுத்தபடியாக ஜீவசக்தி பொருந்தி உணர்ச்சியைத் தூண்டக்கூடிய இசை, வீணைத் தந்திகளிலிருந்து எழுவதே யாகும்.



இத்தகைய பெருமை வாய்ந்துள்ள இசைக் கருவியை இந்நாளில் பலரும் பயின்று பிரபலப்படுத்தி வருகிறார்கள். ரேடியோவிலும் ஆர்க்கெஸ்ட்ராவிலும் வீணை பிரபலமடைந்திருக்கிறது. இசைத் தட்டிலும் வீணையின் நாதத்தைப் பிடித்து வைத்து தருகிறார்கள். அத்தகைய இசைத் தட்டு ஒன்று சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. கொலம்பியா ஜி.இ. 6374 இசைத் தட்டில் சங்கீத பூஷணம் ஸ்ரீ பிச்சுமணி அவர்கள் ஒரு பக்கத்தில் "வாரணமுகி" என்ற கௌடமல்லார் ராகப் பாட்டையும், "முருகன் என்றதுமே" என்னும் ராகமாலிகைக் கீதத்தையும் வீணைக் கருவியில் அழகாக வாசித்திருக்கிறார். மெட்டுக்களும், வாசித்திருக்கும் பாணியும் ரஞ்சகமானவை. நல்ல திறமைசாலி ஒருவரால் வீணை கையாளப்பட்டிருக்கிறது என்பதும் நன்கு தெரிகிறது. இந்த இளம் சங்கீத பூஷணம் கர்நாடக சங்கீதத்துக்கு மேலும் மேலும் சிறந்த தொண்டு செய்து சிறப்படைவாராக.

திறப்பு விழா!

தமிழ் அன்பர்களுக்கெல்லாம் எல்லையற்ற மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி: எட்டயபுரத்தில் கட்டப்பட்டு வரும் பாரதியார் ஞாபகார்த்த மண்டபத்தின் திறப்பு விழாவானது வருஷம் செப்டம்பர் மாதம் பாரதி வாரத்தில் 15உ திங்கட்கிழமை அதிகாலையில் நடைபெறுகிறது. கவியரசி ஸ்ரீமதி சரோஜினி தேவி மண்டபத்தைத் திறந்து வைக்கிறார்கள். ராஜாஜி தலைமை வகிக்கிறார்கள். மற்ற விவரங்கள் பின்னால்.

* * *

இந்த இதழில் வெளியாகியிருக்கும் நன்கொடை ஜாபிதாவில் "கலைமகள்" பதிப்பாளர் ஸ்ரீ நா. ராமரத்தினம் எம். ஏ. பி. எல். அவர்களின் நன்கொடை தலைமை ஸ்தானம் வகிக்கிறது. தென்னிந்தியாவின் தினசரிப் பத்திரிகைகளில் "ஹிந்து" எப்படி நிலைபெற்ற ஸ்தாபனமாக விளங்குகிறதோ, அதுபோல் மாத சஞ்சிகைகளிலே "கலைமகள்" தமிழர் வாழ்க்கையோடு ஒட்டிய சிறந்த ஸ்தாபனமாகி விட்டது. மகாமகோபாத்தியாய ஸ்ரீ சாமிநாதய்யர் அவர்களின் அருமைத் தமிழினால் பெருமை பெற்ற "கலைமகளை", அய்யர் அவர்களின் தலைசிறந்த மாணாக்கர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் போற்றிப் பாதுகாத்துத் திறம்பட நடத்தி வருகிறார். காலஞ்சென்ற உத்தம புருஷரான ஸ்ரீ ஆர். நாராயணசாமி அய்யரின் அளவில்லாத தமிழ் அன்பினாலும் ஊக்கத்தினாலும் தோன்றி வளர்ந்த "கலைமகள்" பத்திரிகையை அவருடைய புதல்வர் ஸ்ரீ நா. ராமரத்தினம் கண்ணைக் காக்கும் இமையைப் போலப் பாதுகாத்து நாளுக்கு நாள் சிறப்புற்று ஓங்க நடத்தி வருகிறார். "கலைமகள்" பதிப்பாளரின் நன்கொடையை மிக மகிழ்ச்சியுடன் பாரதியார் ஞாபகத்துக்குச் சமர்ப்பிக்கிறேன்.

* * *

சென்னை ஷெரிப் ஸ்ரீ ராமசாமி நாயுடு அவர்களைச் சிலர் தெலுங்கர் என்று கருதக்கூடும். "தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்து தமிழ் நாட்டைத் தாயகமாகக் கொண்டவர்கள் எல்லாரும் தமிழர்களே" என்பது நமது கொள்கை. அதன்படி ஸ்ரீ ராமசாமி நாயுடு தமிழர்தான்; அவருடைய தமிழன்பினால் இரண்டு பங்கு தமிழர் ஆகிறார். ஒருவேளை ஸ்ரீ ராமசாமி நாயுடுவைத் தெலுங்கர் என்றே வைத்துக் கொண்டோமானால், அவருடைய நன்கொடையின் மகிமை மூன்று மடங்கு ஆகிறது!

* * *

எட்டயபுரத்தில் பாரதி ஞாபகார்த்தம் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தை முதன் முதலில் வெளியிட்டவர்கள், எட்டயபுரம் பாரதி மன்றத்தார். முதன் முதலில் ஊக்கமாக நிதி வசூல் தொடங்கியவர்களும் அவர்களே. இந்த இரண்டாவது தவணை நிதி வசூலிலும் எட்டயபுரம் பாரதி மன்றத்தார் முதன்மையாக நிற்க விரும்புவதை ஜாபிதாவிலிருந்து காணலாம்.

எனினும் வேண்டிய தொகையில் வசூலாக வேண்டிய பாக்கி இன்னும் அதிகமாயிருக்கிறது. பாரத தேசம் எங்கும் உள்ள தமிழன்பர்கள் எல்லாரும்,—பாகிஸ்தானத்தில் உள்ளவர்களும் கூட,—முன் தடவை செய்தது போல் இம் முறையும் ஊக்கமெடுத்து உழைத்து விரைவில் நிதியைப் பூர்த்தி செய்யக் கோருகிறேன்.

பாரதி மண்டப நிதி

ஸ்ரீ என். ராமரத்தினம், எம். ஏ., பி. எல்., கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர்	300	0	0
ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு, ஷெரிப், தியாகராயநகர், சென்னை	101	0	0
ஸ்ரீ ஏ.எல்.ஏ.ஆர். சோமநாதன் செட்டியார், ஜமீன்தார், தேவகோட்டை	101	0	0
ஸ்ரீ மு. கந்தசாமி செட்டியார், தலைவர், பாரதி இலக்கிய மன்றம், எட்டயபுரம்	101	0	0
ஸ்ரீ மு.ச. வெங்கடாசலம் செட்டியார், பலசரக்கு மளிகை, கோவில்பட்டி	101	0	0
ஸ்ரீ எஸ்.எஸ். நடராஜன், லாயல் மில்ஸ், கோவில்பட்டி	101	0	0

ஸ்ரீ தாமோதரசாமி, லக்ஷ்மி மில்ஸ், கோவில்பட்டி	101	0	0
ஸ்ரீ கே. சந்தானம், ஹிந்துஸ்தான் டைம்ஸ், புது டில்லி	100	0	0
எ. டி. மூர்த்தி. Ind 149555 W. O. P. சிக்னல் செக்ஷன் ஆர். ஏ. எப். ஹகீம்பேட், செகந்திராபாத்	44	6	0
ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார், வாலாஜாபேட்டை	25	0	0
ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யங்கார், அனுமந்தம்பட்டி	25	0	0
ஸ்ரீ ஆர். வெங்கட்ராமய்யர், சீப் ஏஜெண்ட், ரூபி இன்ஷியூரன்ஸ் கம்பெனி, டாக்டர் குருசாமி முதலியார் ரோட், கீழ்ப்பாக்கம்	25	0	0
ஸ்ரீமதி கே. ஆனந்தி, ஐந்தாம் பாரம், லேடி முத்தையா செட்டியார் ஹைஸ்கூல், புரசவாக்கம்	15	0	0
ஸ்ரீ ரங்கன், 'கல்கி' ஏஜெண்ட், விருதுநகர்	5	0	0
காரியதரிசி, பாரதி வாசகசாலை, துரைச்சாமிபுரம்	5	0	0
ஸ்ரீ என். சேஷகிரி, போஸ்டல் ஆடிட் ஆபீஸ், சென்னை	5	0	0
ஆர். எஸ். என். மணி "கல்கி" ஏஜெண்ட், கும்பகோணம்	5	0	0
ஆர். ராமசுப்ரமணியம், கொல்லபதூர், கோபிசெட்டிபாளையம்	5	0	0
கே. வெங்கட்ரங்கம் செட்டியார் மளிகை, சோளங்கிபுரம்	5	0	0
கே. ராமையா, குமாஸ்தா, முனிசிபல் ஆபீஸ், ராஜபாளையம்	5	0	0
ஆர். கடேசபாண்டிச் செட்டியார், தோல் வியாபாரம், வடசேரி, நாகர்கோவில்	5	0	0
ஸ்ரீமதிகள் எம். கே. செல்வமணி, ஸரோஜா, சிந்தாதிரிப்பேட்டை	5	0	0
ஸ்ரீ கி. மகாலிங்கம், "பகீரதன்" உதவி ஆசிரியர், "கல்கி"	5	0	0
(எட்டயபுரம் பாரதி மன்றத் தலைவர் மூலம் வரும் ரூ. 81-க்கு விவரம் :)			
ஸ்ரீ ஆ. தங்கசாமி நாடார், இரும்பு வியாபாரம், எட்டயபுரம்	11	0	0
ஸ்ரீ சா. சுப்ரமண்ய பிள்ளை, சங்கு விலாஸ் ஏஜெண்ட், எட்டயபுரம்	11	0	0
ஸ்ரீ த. மு. இருளாண்டித் தேவர், மரக்கடை, எட்டயபுரம்	10	0	0
ஸ்ரீ மு. துரைசாமி நாயுடு, பலசரக்குக் கடை, எட்டயபுரம்	7	0	0
ஸ்ரீ ப. கு. முத்துக்குமாரசாமி பிள்ளை, ஜவுளி வியாபாரம், எட்டயபுரம்	6	0	0
ஸ்ரீ க. ராமசாமி செட்டியார், ஜவுளி வியாபாரம், எட்டயபுரம்	6	0	0
ஸ்ரீ ஜனாப் மு. தமீஜு முகம்மது ராவுத்தர், பீட்டுக் கடை, எட்டயபுரம்	6	0	0
ஸ்ரீ மு. கோ. ரு. வெங்குருநாத மணியகாரர், ஜவுளிக் கடை, எட்டயபுரம்	6	0	0
ஸ்ரீ மு. மாரியப்ப நாடார், ஷாப் வியாபாரம், எட்டயபுரம்	6	0	0
ஸ்ரீ செ. ஆ. மு. செல்லையா நாடார், பலசரக்குக் கடை, எட்டயபுரம்	6	0	0
ஸ்ரீ வி. ச. சிவபெருமாள் பிள்ளை, காபி ஹோட்டல், எட்டயபுரம்	6	0	0
(விட்டலபுரம் ஸ்ரீ வெங்கடாச்சாரியார் அவர்களின் மூலம் வரும் ரூ.105-க்கு விவரம் :)			
ஸ்ரீ மு. கிருஷ்ணன், விட்டலபுரம்	11	0	0
ஸ்ரீ எஸ். எம். அந்தோணி பர்ணந்து, செய்துங்கநல்லூர்	11	0	0
ஸ்ரீ அ. கடலைமுத்துப் பிள்ளை, விட்டலபுரம்	11	0	0
ஸ்ரீ எஸ். சுப்ரமணியம், விட்டலபுரம்	11	0	0
ஸ்ரீ வி. ஏ. சுந்தரராஜ அய்யங்கார், விட்டலபுரம்	11	0	0
ஸ்ரீ ஜெபமாலை ரோடரிக்ஸ், செய்துங்கநல்லூர்	10	0	0
ஸ்ரீ வி. எஸ். நாராயண அய்யங்கார், விட்டலபுரம்	10	0	0
ஸ்ரீ முத்தையா பிள்ளை, டெயிலர், செய்துங்கநல்லூர்	5	0	0
ஸ்ரீ ராமசாமி பிள்ளை, விட்டலபுரம்	5	0	0
ஸ்ரீ அ. முத்துசாமி பிள்ளை, விட்டலபுரம்	5	0	0
ஸ்ரீ வி. பிச்சப் பிள்ளை, விட்டலபுரம்	5	0	0
ஸ்ரீ ராமசாமிக் கோனார், விட்டலபுரம்	5	0	0
ஸ்ரீ பரமசிவன் செட்டியார், விட்டலபுரம்	5	0	0
(திருச்செங்கோடு "பாபுலர் பிரஸ்" மூலம் வரும் ரூ. 35-க்கு விவரம் :)			
ஸ்ரீ கே. ஏ. காசிவிஸ்வநாத முதலியார், தலைவர், தாலுகா காங்கிரஸ் கமிட்டி, திருச்செங்கோடு	10	0	0
ஸ்ரீ டி. எம். செங்கோட முதலியார், திருச்செங்கோடு	5	0	0
ஸ்ரீ ஆர். மருதன், பாபுலர் பிரஸ், திருச்செங்கோடு	5	0	0
ஸ்ரீ டி. கே. சந்திரராஜன் செட்டியார், ஹானரரி மாஜிஸ்ட்ரேட், திருச்செங்கோடு	5	0	0
ஸ்ரீ வி. ஏ. முத்துசாமி முதலியார், 18—134, பிரப் ரோடு, ஈரோடு	5	0	0
ஸ்ரீ கே. கே. நடராஜ முதலியார், ஹாட்டன், சிலோன்	5	0	0

ஆக ரூ. 1411—6—0

முன் ஜாபிதாவின்படி ரூ. 2583—1—3

ஆக மொத்தம் ரூ. 3994—7—3

No. 5.

வேலவருக்கு

எஸ்.வி.எஸ்

"இதென்ன வாழ்க்கை? இந்தச் சென்னையை விட்டு வெளியே போனால் தேவலை!" என்று எண்ணிக்கொண்டே அன்று காரியாலயத்துக்குள் நுழைந்தேன். ஆசிரியர், "என்ன, நீ திருச்செங்கோடு போகிறாயா?" என்றார். எனக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்து, அதுவும் நழுவி வாயில் விழுந்தாற் போலிருந்தது.

"ஓ! பேஷாகப் போகிறேன்" என்றேன்.

ஜூன் 29உ ஹரிஜன ஆலயப்பிரவேசம். முதல் நாள் இரவே திருச்செங்கோடு போய்ச் சேர்ந்து விட்டேன்.

திருச்செங்கோட்டில் என் நண்பர் ஒருவர் வீட்டில்தான் தங்கினேன். அன்றிரவு வெகு நேரம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்து விட்டு "திருச்செங்கோட்டுக்குத் தனி மகிமை உண்டு!" என்றார் என் நண்பர்.

"என்ன?"

"இங்குதான் ஒரு பரம பக்தர் முக்தி பெற்றார்" என்றார்.

"ஐயோ!" என்றேன். ஆம், எனக்கு முக்தி பெறுவதில் தற்சமயம் விருப்பமில்லை.



ஹரிஜனங்கள் ஊர்க் குளத்தில் இறங்கி அமுதமெனத் தண்ணீர் அருந்தும் காட்சி

ஆகவே "எனக்கு முக்தி வேண்டாம் என்று முதலில் வேலவரிடம் விண்ணப்பித்துக் கொள்ளப் போகிறேன்" என்றேன்.

* * *

மறுநாள் காலை "எல்லாரும் புறப்படுங்கள், புறப்படுங்கள், குளத்துக்குப் போக வேண்டும்! வந்தே மாதரம்! மகாத்மா காந்திஜீ ஜேய்!" என்று கோஷமிட்டுக் கொண்டு இத்தண்டையும் அத்தண்டையும் சுற்றி வந்தார் ஒருவர்.

நமது காந்தி ஆசிரமம் ராமதுரையைத் தவிர்த்து வேறு யார் இவ்வளவு பரபரப்பும் உற்சாகமும் கொண்டு விளங்க முடியும்!

"குளத்துக்குப் போகவா! அதற்கு இவ்வளவு ஜே கோஷம் போடுவானேன்!" என்று ஒன்றும் புரியவில்லை. விழித்துக் கொண்டிருந்தேன்.

வேறொரு நண்பர் "இந்த ஊர்க் குளத்தில் இத்தனை நாள் ஹரிஜனங்கள் அனுமதிக்கப் படவில்லை. இன்றுதான் அவர்களுக்கு ஆலயப் பிரவேசத்துடன் குளப் பிரவேசமும் கிடைக்கப் போகிறது!" என்றார்.

ஹரிஜன சகோதரர்கள் "ஜே!" கோஷத்துடன் வீதிவலம் வந்து குளத்தில் இறங்கி ஆர்வத்துடன் தண்ணீரை அள்ளி அள்ளிக் குடித்தனர்.

பிறகு, சபாநாயகர் கௌசண்முகம் பிள்ளை, ஸர்தார் வேதரத்தினம், ஸ்ரீ எல். என். கோபாலசாமி மற்றும் பல ஹரிஜன பக்த கோஷ்டிகள் புடைசூழ மலையடிவாரத்தை நோக்கிப் புறப்பட்டோம். புதுப்பாளையம் காந்தி ஆசிரமத் தொண்டர் ஸ்ரீ தியாகராஜன் பஜனை கோஷ்டியை நடத்தினார்.

சங்கர சிவா சிவ சங்கர சிவா சிவ
சங்கர சிவா சிவ சங்கர சிவா!

என்று பஜித்துக் கொண்டு படிகள் ஏறும் போது, சாதாரணமாய்க் கெஞ்சவும், கொஞ்சவும் செய்யவேண்டிய கால்கள் அனாயாசமாகச் சிரமம் பாராமல் மலையேறின.

கொஞ்ச தூரம் சென்ற பிறகுதான் "டாக்டர் சுப்பராயன் நம்முடன் வரவில்லையே, அவருடைய சொந்த ஊர்க் கோவி

ஒரு விண்ணப்பம்

னுக்கு அவரில்லாமல் போவதாவது?" என்று என் நண்பரைக் கேட்டேன்.


"இல்லை; அவர் வந்து விடுவார்" என்றார் என் நண்பர்.

"இத்தனை படிகள் ஏறி அவர் என்றைக்கு வருவது?" என்றேன். "இதோ பாருங்கள்" என்றார். எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. நாங்கள் புறப்பட்டதற்கு வெகு நாழிகைக்குப் பின்னர் புறப்பட்டு, எங்களுடன் எப்படியோ வந்து சேர்ந்து கொண்டு விட்டார் டாக்டர் சுப்பராயன். அவர் எவ்வளவு அனாயாசமாக மலை ஏறியிருக்க வேண்டும் என்று ஆச்சரியமாகப் போய் விட்டது.

கோபுர வாசலை அடைந்தவுடன் "கமாண்டர் இன் சீப்!" என்று கூப்பிட்டார் என் நண்பர். உடனே ஒரு குருக்கள் வந்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"இந்த ஊர்க் கோயில் தலைமைக் குருக்களுக்குச் 'சேனாபதிக் குருக்கள்' என்று பெயர். அவர் எங்களுக்கு ரொம்பவும் பரிச்சயமானவராதலால் 'கமாண்டர் இன் சீப்' என்று அழைப்பது வழக்கம்" என்றார்.

சபாநாயகருக்குப் பூரண கும்பம் அளித்து, அவரை மரியாதையுடன் உள்ளே அழைத்துச் சென்றனர். முதலில் நாங்கள் திருச்செங்கோட்டு வேலவர் சந்நிதியை அடைந்தோம். அர்ச்சனை செய்த அர்ச்சகரிடமிருந்து "மகாத்மா காந்தி நாய்ணு" என்று குரல் வந்தது. உடனே என் உடம்பிலிருந்த ஆச்சரிய நரம்புகள் ஆச்சரியப்பட்டு நின்றன.



ஹரிஜன ஹாஸ்டலைச் சேர்ந்த மாணவர்கள். அருகே கையைக் கட்டிக் கொண்டு நிற்பவர் ஹரிஜனத் தொண்டர் ஸ்ரீ சுப்புரத்தினம். அவருக்குப் பக்கத்திலிருப்பவர் ஹரிஜனங்களின் அன்புக்கும் மதிப்புக்கும் பெரிதும் பாத்திரமான ஸ்ரீ வி. எஸ். தியாகராஜன்.

நான் டாக்டர் சுப்பராயன் அவர்களை இதைப்பற்றி விசாரித்தேன். தம் ஊருக்கு வரும் பிரதான அதிதியின் பெயருக்கு ஒரு அர்ச்சனையும், மற்ற நண்பர்கள் சார்பாக மகாத்மா காந்தியின் பெயரில் ஒரு அர்ச்சனையும் செய்வது தம் வழக்கம் என்று எனக்கு விளக்கினார்! ஒரு நண்பர் "நாங்கள் கடவுள் பெயருக்கே அர்ச்சனை செய்து விடுவது வழக்கம்!" என்றார்.

அதற்கு டாக்டர் சுப்பராயன் "எனக்கு மகாத்மாதானே கடவுள்?" என்று ஒரு பெரிய போடு போட்டார்!

பின்னர், அர்த்தநாரீசுவரரின் அனுக்கிரக தரிசனமும், பெருமான் சேவையும் திவ்யமாய்க் கிடைத்தன. விபூதி குங்குமப் பிரசாதம் பெற்றுப் பிராகாரத்தில் வலம் வந்தோம். அங்கே ஒரு தூணில் ஒரு சிற்பமிருந்தது. அது எல்லாருடைய முகத்திலும் ஒரு கேள்விக் குறியைப் போட்டு வைத்தது!

தொப்பி அணிந்த சிற்பமாக இருந்தது தான் காரணம்!


சுமார் நூறு வருஷங்களுக்கு முன்பு அந்தப் பிராகார மண்டபம் இடிந்து விழும் நிலையிலிருந்ததாம். அப்போது சேலத்தில் கலெக்டராக இருந்த டேவிஸ் துரை சில தூண்கள் முட்டுக் கொடுத்து நிறுத்தி வைத்தாராம். அதற்கு நன்றி செலுத்தும் வகையில் ஒரு சிற்பி அவருடைய உருவத்தையே தூணில் செதுக்கி வைத்ததாக டாக்டர் அவர்கள் எங்களுக்குக் கூறினார்.

அன்று கோவிலில் நமது சபாநாயகர் சில வார்த்தைகள் பேசினார். "படித்த

எங்களிடையே எவ்வளவோ பயமிருக்கிறது! இது சொன்னால் புரியாது. நீங்கள் எங்கள் நிலையிலிருந்து பார்த்தால் தான் புரியும்! 'ஹரிஜனங்கள் ஆலயப் பிரவேசம் செய்யலாம்' என்று சட்டம் செய்தால் போதாது. எங்கள் பயத்தை இந்தச் சட்டம் நீக்காது. ஒவ்வொரு ஜாதி ஹிந்துவும் தான் குறைந்தது இரண்டு ஹரிஜனங்களையாவது கோவிலுக்கு வரும்போதெல்லாம் அழைத்து வரவேண்டும். இப்படிச் செய்தால்தான் எங்கள் பயம் நீங்கும்'' என்றார்.

இதை யொட்டி அன்று உஞ்சலையில் நடந்த ஹரிஜன மகாநாட்டில் ஸ்ரீ எல். என். கோபாலசாமி ஒரு விஷயம் கூறினார். ''ஜாதி ஹிந்துக்களாகிய நாம் ஹரிஜனங்களை எவ்வளவோ கொடுமைப் படுத்தியிருக்கிறோம். இவற்றை எவ்வளவோ நான் தெரிந்து கொண்டிருக்கிறேன் என்றாலும் போதாது. அவர்கள் மனோவேதனையைப் பரிபூரணமாக உணர அடுத்த ஜன்மத்தில் ஹரிஜனனாகப் பிறந்தால்தான் நான் நன்றாக உணர முடியும்!'' என்று மகாத்மா காந்தி அடிக்கடி கூறுவாராம். இதை ஸ்ரீ எல். என். கோபால்சாமி கூறியபோது சபையில் பலருக்கு மயிர்க்கூச்செறிந்தது! எனினும், மகாத்மாவுக்கு மறுஜன்மம் கிடையாது, நம் போன்றவர்கள் மறுஜன்மம் அடைவதற்குள் ஹரிஜனங்கள் பூரண சமத்துவம் பெற்று விடுவார்கள் என்ற எண்ணம் ஆறுதல் தந்தது.

பின்னர் என்னையும், காமிராக்காரர் ஸ்ரீ நாகராஜ ராவையும் ஸ்ரீ ராமதுரை காரில் புதுப்பாளையம் காந்தி ஆச்ரமத்துக்கு அழைத்துச் சென்றார். ''இது நெசவாலை. இதுதான் பஞ்சு-கொட்டை பிரிக்குமிடம். இதுதான் கிராம மக்களுக்குப் பஞ்சு வழங்குமிடம். இது தான் நூல் கிடங்கு. இது துணிக் கிடங்கு! இதுதான் பசு மாடு. இதுதான் ஆஸ்பத்திரி!'' என்று ஒவ்வொன்றாக அழைத்துக் காட்டிக் கொண்டு வந்தார். அன்று ஆச்ரமம் காவலின்றி அமைதியாக இருந்தது. அதற்கு ஆசிரமவாசிகள் ஆலயப் பிரவேசத்துக்காகத் திருச்செங்கோடு சென்றுவிட்டதுதான் காரணம். ஒரு காலத்தில் ராஜாஜி இருந்து மதுவிலக்கு, கதர்ப் பிரசாரம், ஹரிஜனத் தொண்டு முதலிய நிர்மாணத் திட்டங்களைச் செய்து காண்பித்த புனித இடத்துக்குள் பிரவேசிக்க எனக்கு இயற்கையாகத் தகுதியில்லை. ஆனாலும் ஆசிரமத்துக்குச் செல்லும் பாக்கியம் அடியேனுக்கும் கிடைத்தது. ஆகவே ஹரிஜனங்கள் அன்றைய தினம் ஆலயப் பிரவேசம் பெற்று மகிழ்ந்ததைவிட நான் ஆயிரம் மடங்கு மகிழ்ந்தேன், ஆசிரமப் பிரவேசம் பெற்று!



டேவிஸ் துரை

* * *

அர்த்த நாரீசுவரரைப் பார்த்து, 'பாகத்தில் ஒருவன் வைத்தான்' என்று பெருமையாகச் சூர்ப்பனகை சொல்லுவதாகக் கம்பராமாயணத்தில் வருகிறது. இது எனக்கு அன்று நினைவு வரவே, சூர்ப்பனகை எவ்வளவுபெரிய வைத்தியக்காரியாக இருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டேன். மறு நாள் சென்னைக்கு வந்தேன். வழியில் என்னைச் சந்தித்த நண்பர், ''என்ன அசாத்திய சந்தோஷத்துடன் இருக்கிறீர்களே!'' என்றார். ''நம்ம பாடு தேவலை!'' என்றேன். ''என்ன?'' என்றார். ''நமக்கு வீட்டுவாசல் துறந்துப் போய் எங்கேயாகிலும் போகவேண்டுமே என்றால் போகமுடிகிறது. ஆனால் அர்த்த நாரீசுவரரைப் பாருங்கள். பார்வதி தேவிக்குத் தமது மேனியில் பாதியைக் கொடுத்துவிட்டு, எங்கேயும் அவளை விட்டுவிட்டுப் போக முடியாமல் நின்றுவிட்டாரே'' என்றேன். ''ஆமாம், நம்ம பாடு தேவலைதான்!'' என்று ஆமோதித்தார் என் நண்பர்.



காந்தி ஆசிரமத்துச் சிந்து பசு

குழந்தையின் குதூகலம்

விந்தன்

அன்றிரவு சங்கருக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அவனுடைய நினைவெல்லாம் அன்று மாலை வாங்கிய 'ஆடும் குதிரை'யின் மீதே இருந்தது. அதன்மீது தான் ஏறிக் கொண்டு ஊர்ந்து சவாரி செய்வது போலவும், அது ஆகாய வீதியெல்லாம் ஜம் பறக்கப் பறந்து செல்வது போலவும் கற்பனை செய்து கொண்டிருந்தான்.

பொழுது விடிந்ததும் ஒரு நிமிஷம் கூட அவனால் தாமதிக்க முடியவில்லை. இட்லியை மறந்தான்; சட்னியை மறந்தான்; காப்பியைக் கூட மறந்து விட்டான்! அந்த ஆடும் மரக் குதிரையை எடுத்துக் கொண்டு ஆட்டம் போடுவதற்காகத் தெருவுக்கு ஓடோடியும் வந்து விட்டான்.

தன்பெருமை யடித்துக் கொள்வதில் பெரியவர்களுக்குத்தான் ஆசை யென்பதில்லை; குழந்தைகளுக்கும் அது இருக்கத்தான் இருக்கிறது. இல்லையென்றால், அந்த ஆடும் குதிரையை வைத்துக் கொண்டு அவன் தன் வீட்டுக் கூடத்திலேயே ஆட்டம் போட்டிருக்கலாம். ஆனால், என்ன பிரயோசனம் அதனால்? அந்தக் குதிரை வாங்கிய வைபவத்தைப் பற்றி அவன் தன் நண்பர்களிடமெல்லாம் சொல்ல வேண்டியது எவ்வளவோ இருக்க, அதைத் தன் வீட்டுக் கூடத்திலேயே வைத்துக்கொண்டு ஆடினால் அவ்வளவு சுகப்படுமா? இல்லை. அதற்காக அவன் தன் நண்பர்களுடைய வீடுகளுக்குச் சென்று அவர்களை வலுவில் அழைத்துக் கொண்டு வரத்தான் முடியுமா? தெருவுக்கு வந்துவிட்டால் தானே கதறிக்கொண்டு வருகிறார்கள்!

சங்கர் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. அந்தக் குதிரையின் மீது ஏறி, அவன் 'ஹை ஹை!' என்று ஓர் ஆட்டம் போட்டதுதான் தாமதம், அப்பொழுது தான் படுக்கையை விட்டு எழுந்த எதிர் வீட்டு மணி பறந்தோடி வந்தான்.

“டேய், சங்கர்! ஏதடா, உனக்கு இந்தக் குதிரை? யார் வாங்கிக் கொடுத்தது?” என்று அவன் சங்கர் எதிர்பார்த்தபடியே ஆவலுடன் கேட்டும் வைத்தான்.

“என் அப்பா வாங்கிக் கொடுத்தார்!” என்று சங்கர் ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விட்டுப் போயிருக்கலாம். ஆனால் விஷயத்தை அவ்வளவு சீக்கிரத்தில் முடித்துவிட அவனுக்கு விருப்பமில்லை. கொஞ்சம் ஆதியோடந்தமாகவே ஆரம்பித்தான்:

“நேற்று ஞாயிற்றுக்கிழமையோ இல்லையோ, என் அப்பாவுக்கு ஆபீஸ் கிடையாது. நான், என் அம்மா, அப்பா எல்லோரும் மத்தியானம் சாப்பிட்டானதும் ஸினிமாவுக்குப் போனோம்......”

“என்ன, ஸினிமாவா! அதென்னடா, ஸினிமா!”

சங்கருக்குச் சிரிப்பு வந்தது. “என்னடா, அந்தப் பட்டிக்காட்டு ஆசாமியா யிருக்கிறாயே? உனக்கு ஸினிமாவென்றாலே இன்னதென்று தெரியாதா?” என்று கேட்டான்.

“தெரியாதுடா!” என்றான் மணி, முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு.

“அட, நிஜமாவா!” என்று மீண்டும் கேட்டான் சங்கர். அவனால் நம்ப முடியவில்லை!

“நிஜமாத்தாண்டா!” என்றான் மணி.

“அப்படின்னு சொல்றேன் கேளு: ஸினிமான்னு, எல்லாம் ஒரே படமா யிருக்கும். ராஜா படம், ராணி படம், திருடன் படம் எல்லாம் வரும். அந்தப் படமெல்லாம் சும்மா அப்படியே இருக்கும்னு நினைக்கிறயா? இல்லே; ஆடும், பாடும், பேசும், சிரிக்கும்—எல்லாம் செய்யும்!”

“அப்படியா, சங்கர்! இன்னொரு சமயம் போறப்போ என்னையும் கூட்டிக்கிட்டுப் போறயா?”

“உம்......அம்மாவா? காசு எடுத்துண்டு வரணும்! இல்லாட்டா உன்னே விட மாட்டான்!”

“சரி, அது போகட்டும், சங்கர்! இந்தக் குதிரை உனக்கு ஏது? ...... அதைச் சொல்லு!”

“ஆமாம், ஆமாம்! அதுக்குள்ளே மறந்துட்டேனே!—நாங்க எல்லோரும் ஸினிமாவுக்குப் போனோமா, அப்புறம் நேரே ஹோட்டலுக்கு வந்தோம்......!”

"அது என்னடா, ஹோட்டல்!"

சங்கருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை; இடி இடியென்று சிரித்து விட்டான். மணியை வெட்கம் பிடுங்கித் தின்றது. அந்த இடத்தை விட்டு உடனே ஓடிவிடலாமா என்றுகூட நினைத்தான். ஆனால், ஹோட்டலைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை, அந்த உணர்ச்சியை மீறி நின்றது.

"என்னடா, மணி! நீ நிஜமாச் சொல்லுடா! என்னாலே நம்பவே முடியலையே, உனக்கு ஹோட்டலைக் கூடவா தெரியாது?"

"நான் பொய் சொல்வேனா? எனக்கு நிஜமாவே தெரியாதுடா!"

"ஹோட்டல்னு ஒரே பட்சண மயமாயிருக்கும்' பாதாம் அல்வா, குலோப்ஜான், குஞ்சாலாடு, ரஸகுல்லா, ஜாங்கிரி, மைசூர் பாக் — இப்படி எத்தனை எத்தனையோ விதமான தித்திப்புப் பட்சணங்கள் எல்லாம் இருக்கும்; அப்புறம் போண்டா, வடை, மிக்சர் — இப்படி எத்தனை எத்தனையோ விதமான காரப் பட்சணங்கள் எல்லாம் இருக்கும். கடையிலே காப்பி, டீ எல்லாம் வேறே. இதோ வரிசை வரிசையா மேஜை, நாற்காலி எல்லாம் போட்டிருக்கும்; நாமெல்லாம் போனதும் 'ஜம்'மென்று உட்கார்ந்துகொள்ள வேண்டியது. 'என்ன வேணும்?'னு கேட்டுண்டே ஒருத்தன் வருவான். அவன் நமக்கு வேண்டியதைக் கொண்டுவந்து வைப்பான். ஒரு கை பார்த்து விட்டு, வாசல்லே உட்கார்ந்திருக்கும் 'காஷிய'ரண்டே பணத்தைக் கொடுத்துட்டு வந்துட வேண்டியது!"

மணியின் நாக்கில் ஜலம் ஊறிற்று. அவன் அதைக் கூட்டி விழுங்கிக் கொண்டே, "என்னடா, நீ என்னென்னவோ சொல்றியே! எனக்கு ஒண்ணுமே புரியலையேடா!" என்று தலையைச் சொறிந்தான்.



"ஆமாண்டா, அதெல்லாம் தலையைச் சொறிந்தாக் கூடப் புரியாதுடா!" என்றான் சங்கர் சிரித்துக் கொண்டே.

மணியின் முகத்தில் அசடு வழிந்தது. ஆனாலும் அவன் அந்த இடத்தை விட்டு நகராமல், "ஹூம்... அப்புறம்......?" என்று மேலே ஆரம்பிக்கச் சொல்வது போல சங்கரின் முகத்தைப் பார்த்தான்.

அதற்கேற்றாற்போல், "அப்பாலே நாங்கள் எல்லோரும் 'பீச்'சுக்குப் போனோம்!" என்று சங்கரும் நீட்டி முழக்கிக் கொண்டு ஆரம்பித்தான்.

அவனை இடை மறித்து, "ஏன்!" என்று கேட்டு வைத்தான் அப்பாவி மணி.

"போடா, மண்டு! 'பீச்'சுக்கு எதற்காகப் போவார்கள்?" என்று எரிந்து விழுந்தான் சங்கர்.

"எதற்குப் போவார்கள்!" என்று மணி அவனையே மீண்டும் திருப்பிக் கேட்டான்!

"காற்று வாங்குவதற்குத்தான்!"

"ஏன், இங்கெல்லாம் கூடத்தானே காற்றடிக்கிறது?"

"அங்கே அடிக்கும் காற்றின் சுகமே வேறேடா! இதோ பார், மேலே நீலவானம் இருக்கோ, இல்லையோ? அதே மாதிரி அங்கே ஒரு நீலக் கடல் இருக்கு. அதிலேயிருக்கு ஜலம் அலைமேல் அலையாக் கிளம்பி, முத்துக்கள் தெறித்தாற் போலக் கரையிலே வந்து மோதும். அது பார்ப்பதற்கு எவ்வளவு அழகாயிருக்கும், தெரியுமா?"

"அதைப் பார்க்கக்கூடக் காசு கொடுக்க வேணுமாடா?"

"இல்லேடா, இல்லே! யாரு வேணுமானாலும் போய்ப் பார்க்கலாம்!"

மணியின் முகம் மலர்ந்தது. "அப்படி யானால் நாளைக்கே தன்னை 'பீச்'சுக்குக் கூட்டிக்கொண்டு போகும்படி அப்பாவை ஏன் கேட்கக் கூடாது!" என்று எண்ணிக் கொண்டான்.

ஆனால், அடுத்த கணமே அவனுடைய முகம் சுருங்கிவிட்டது. ஏனெனில், அந்தப் 'பாழும் அப்பா' யார் என்று அவனுக்கு நானது

வரை தெரியவே தெரியாது! இத்தனைக்கும் அந்த மனிதன் இன்னும் செத்துப் போகவும் இல்லை!

அம்மாவைக் கேட்டாலோ, அவள் ஆளுக்கு ஒருவிதமாகப் பதில் சொல்கிறாள்!

அவன் என்ன செய்வது?

“சரி, அம்மாவையே ஒரு காலுக்குக் கட்டிக்கொண்டு போகச் சொன்னால் போகிறது!” என்று தனக்குள் எண்ணிக் கொண்டு, மேலே சங்கரின் பேச்சைக் கேட்பதற்குத் தயாரானான்.

“அப்பாவோடுதான் பஜாருக்கு வந்தோம்; அங்கேதான் இந்தக் குதிரையை வாங்கினோம்!” என்று முடிக்கும்போதும் கீட்டு முழகிக் கொண்டே முடித்தான் சங்கர்.

“சங்கர், சங்கர்! இந்தக் குதிரை மேலே நானும் கொஞ்ச நேரம் ஏறிச் சவாரி செய்யட்டுமா!” என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டே அந்தக் குதிரையை நெருங்கினான் மணி.

நான் சொல்வதற்கோ, அவன் கேட்பதற்கோ அதற்கு மேல் ஒன்றும் இல்லாமற் போகவே, தேர்தலில் வெற்றி பெற்று அதிகாரத்துக்கு வந்த வட்டகர்களைப் போல, “போடா, போ!” என்று எரிச்சலுடன் அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டான் சங்கர்!

அதற்குப் பிறகு அவன் தன் ‘குதிரைப் புராண’த்தைக் கேட்பதற்கு வேறு பையனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்!

மணி அழுது கொண்டே வீடு திரும்பினான். விஷயம் இன்னதென்று அறியாத அவன் தாயார், “என்னடா கண்ணு, அழுகிறே? வயிற்றைப் பசிக்கிறதா? இந்தா, காசு! ஆப்பம் வாங்கிக்கோ!” என்று வழக்கமாக அவன் காலை ‘டிபன்’ செலவுக்குக் கொடுக்கும் ‘சில்லறை’யை எடுத்து அவனிடம் கொடுத்தாள்!

★

கதிர்வேலு நாடார் எண்ணெய் மண்டியில் மணியின் தகப்பனுக்கு வேலை. வரவு செலவு கணக்கைப் பார்த்துக் கொள்வதிலிருந்து, வாங்க வருவோருக்கு எண்ணெய் அளந்து ஊற்றும் வரை உள்ள எல்லா வேலைகளையும் அவரே தான் பார்த்துக்கொள்ள வேண்டும். மாதச் சம்பளம் முழுசாக அவருக்குப் பதினைந்து ரூபாய்! இவ்வளவு தாராளமாக நாடார் அவருக்குச் சம்பளம் கொடுத்துக்கொண்டிருந்ததற்குக் காரணம், பூமிக்கும் வானத்துக்குமாக விரிந்து கிடந்த அவருடைய பரந்த மனம் தான் என்றாலும், இன்னொரு விசேஷ காரணமும் இருந்தது. “கடலை யெண்ணெயை நல்லெண்ணெயாக்குவது எப்படி?” — “ஒரு மணங்கு தேங்காயெண்ணெயில் எவ்வளவு கடலை யெண்ணெய் சேர்க்கலாம்?” — “எடையைக் கூடுதலாக்க என்னத்தைப் போட்டுக் கரைப்பது?” என்பது போன்ற விஷயங்களில் மணியின் தகப்பனுக்கு ஐம்பது வருட கால அனுபவம் உண்டு. அந்த ஐம்பது வருட கால அனுபவத்தையும் அவர் வேறு எங்கிருந்தும் அடைந்துவிடவில்லை; கதிர்வேலு நாடார் கடையிலிருந்தேதான் அடைந்திருந்தார்!

நல்லவேளையாக, நாடார் எந்த விஷயத்திலுமே கண்டிப்பாக நடந்து கொள்பவராதலால், விளக்கெண்ணெய் வியாபாரத்தை மட்டும் வைத்துக்கொள்ளவில்லை!

மேற்கூறியபடியெல்லாம் செய்வது பாவம் என்பதைக் கதிர்வேலு நாடார் அறியாமலிருந்தார் என்று சொல்லிவிடவும் முடியாது. ஆனால், “அந்தப் பாவத்துக்குத் தண்டனை இந்த ஜன்மத்திலா கிடைக்கப் போகிறது? அடுத்த ஜன்மத்தில் தானே!” என்ற தைரியம் அவருக்கு!

இந்தத் தைரியம் ஒரு பக்கம் இருந்தாலும், இன்னொரு பக்கம் அவருக்குக் கொஞ்சம் அச்சமும் இருக்கத்தான் இருந்தது. அதற்காக, அவர் சர்க்கார் அதிகாரிகளுக்குக் கொடுக்கும் லஞ்சத்தோடு லஞ்சமாக, சுவாமிகளுக்கும் அவ்வப்போது கும்பாபிஷேகம் செய்து வைப்பது, லட்ச தீபம் ஏற்றி வைப்பது, திருவிழா நடத்துவது — இம்மாதிரி ஏதாவது செய்து, ‘அடியார்க்கு நல்லாராய், அன்புக்கும் ஆண்டவனுக்கும் அடிமையாய், எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியாராய், சத்தியமே உருவாய் வாழ்ந்து வந்தார்.

இதனால்தானோ என்னவோ சர்க்கார் அதிகாரிகளைப் போலவே சுவாமிகளும் அவரைக் கண்டும் காணாமல் இருந்துவிட்டனர். அவருடைய திருத் தொந்தியைப் போலவே வியாபாரமும் நாளொரு மண்டியும் பொழுதொரு வண்ணமுமாகப் பெருகி வந்தது. அதாவது, வெகு சீக்கிரத்திலேயே தமிழ்நாடு பூராவும் கிளைக் கடைகளை ஆரம்

பித்து நடத்தினர். சொத்தநிலேயே எண்ணெய் ஆலை ஒன்றும் வைத்தாகி விட்டது. வருஷ வருமானம் ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் மதிப்பிடப்பட்டு வந்தது. 'ஸ்தாவர, ஜங்கம' சொத்துக்களாக வாங்கி வாங்கிச் சேர்த்துக் கொண்டிருந்தார். இத்தனைக்கும் பணம் 'சரியா யிருக்கிறதா?' என்று எண்ணிப் பார்த்துக் கொள்வதைத் தவிர அவர் வேறு ஒரு பாவமும் செய்து அறியார்!

மணியின் தகப்பனுக்குத் தம் எஜமானரின் மேல் கொள்ளை ஆசை. "எசமான், 'மாணிக்கம், மாணிக்கம்!'ன்னு என்மேலே உசிரையே வச்சிருக்காரு!" என்று தம் மனைவியிடம் அவர் பெருமையுடன் சொல்லிக் கொள்வார். "சம்பளத்திலே ஒண்ணையும் காணுமே!' என்பாள் அவள், அலட்சியமாக.


"ஓ, போ! பணமா பெரிசு! மனுசன் அன்பு இல்லே பெரிசு!" என்பார் மாணிக்கம் பிள்ளை.

ஆமாம், அவருக்கு எப்போதுமே தம் உரிமையை விடக் கடமைதான் பெரிது. இல்லையென்றால் கேவலம் ஐம்பது வருடத்திற்குள் ஒன்றேணை கால் டஜன் ரூபாய்களைச் சம்பளமாகப் பெறுவ தென்பது அவ்வளவு லேசான காரியமா?

நல்ல வேளையாக, மாணிக்கம் பிள்ளையைப் பிடித்த 'பைத்தியம்' கதிர்வேலு நாடாரையும் பிடித்து விடவில்லை. அவருக்குத் தம கடமையைவிட உரிமைதான் எப்போதும் பெரிது!

தமக்கு உலகம் இன்னதென்று தெரிந்த நாளிலிருந்து — அதாவது, நாடார் கடையில் வேலைக்கு அமர்ந்ததிலிருந்து — ஸ்ரீயோதயத்தையோ, அதன் அஸ்தமனத்தையோ திருவாளர் மாணிக்கம் பிள்ளை அவர்கள் தம் வீட்டிலிருந்தபடி பார்க்கும் பாவத்தை ஒரு நாளாவது செய்தவர் அல்ல; எண்ணெய் மண்டியில் இருந்தபடிதான் பார்ப்பார்!

இந்த 'அதிர்ஷ்டம்' இருக்கிறதே, அது நம் மாணிக்கம் பிள்ளையை அடியோடு கைவிட்டு விட்டதென்றும் சொல்லிவிட முடியாது. ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்த அவருக்கு மணி ஒருவன் மட்டும்தான் உயிருடன் இருந்தான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! அது மட்டுமா? தவறிப் போன தம் ஐந்து குழந்தைகளின் அடக்கத்தின் போதும் அவர் ஸ்ரீயோதயத்தை



1. ரயிலில், "என் போலே வந்து என் ஐயா இப்படி விழுகிறீர்?" என்று பரஸ்பரம் எதிர்த்து விழுந்தவர்கள்......

2. ......சிறிது நேரத்திற்குப் பிறகு தூங்கும்போது இப்படிக் காட்சி அளிக்கிறார்கள்!

வும் அதன் அஸ்தமனத்தையும் தம்முடைய வீட்டிலிருந்தபடியே பார்க்கும் பாக்கியம் வேறு கிடைத்தது!

தன் தகப்பனார் வேலைக்குப் போகும் போதும், வீடு திரும்பும்போதும் மணி தூக்கத்தில் ஆழ்ந்திருப்பான். ஆகவே, அன்று வரை தந்தையும் மகனும் ஒருவரை யொருவர் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் வாய்க்காமலே இருந்து வந்தது.

"அப்பா எங்கே, அம்மா?" என்று அடிக்கடி அவன் தன் தாயாரைக் கேட்ப துண்டு. அவள், "வேலைக்குப் போயிருக் கிறார்!" என்பாள் ஒரு சமயம்; "ஊருக் குப் போயிருக்கிறார்!" என்பாள் இன் னொரு சமயம்; தொந்தரவு தாங்காமல் சில சமயம், "அப்பா இறந்து விட்டார்!" என்று அவள் கொஞ்சங்கூடக் கூசாமல் சொல்லி விடுவதும் உண்டு.

இவற்றையெல்லாம் கேட்டுக் கேட்டு மணிக்கு அலுத்துப் போய் விட்டது. "அப்பா எப்படியாவது தொலைந்து போகட் டும்; அவரைப் பற்றிய கவலையே நமக்கு வேண்டாம்!" என்று எண்ணியவனாய், அன்று அவன் தன் தாயாரை நோக்கி, "அம்மா! என்னை 'பீச்'சுக்காச்சும் ஒரு நாளைக்குக் கூட்டிக்கிட்டுப் போயேன்! அதற்குக் காசுகூட வேணுமாமே!" என்றான்.

தாயாரின் கண்களில் நீர் சுரந்தது. "அந்தப் பாழும் 'பீச்'சு எப்படி யிருக்கும், என்னமா யிருக்கும் என்றுகூட எனக்குத் தெரியாதேடா, கண்ணு!" என்றாள்.

மணிக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய் விட்டது. "என்ன! உனக்குக்கூடவா தெரியாது!" என்றான் விழிகள் பிதுங்க.

தாயார் மௌனம் சாதித்தாள்.

"பொய் சொல்லாதே, அம்மா! நிஜமாச் சொல்லு!" என்றான் மணி.

"நிஜமாத்தான் சொல்றேன்; அது எந்தப் பக்கம் இருக்குன்னுகூட இன்று வரை எனக்குத் தெரியாதேடா!"

மணிக்கு அழுகை வந்துவிட்டது. "போ, அம்மா! நீ பொய் சொல்றே!" என்று அவன் 'உண்மை'யைச் சொல்லிச் சொல்லி, ஓயாமல் அழ ஆரம்பித்து விட்டான்.

தாயார் எவ்வளவோ சமாதானம் சொல் லிப் பார்த்தாள். அவன் கேட்கவில்லை! அழுதபடியே இருந்து நேரத்திற்கெல்லாம் அயர்ந்து தூங்கிவிட்டான்.

அன்றிரவு மாணிக்கம் பிள்ளை சாப்பிட் டானதும், தன்னை 'பீச்'சுக்காவது கூட்டிக் கொண்டு போகும்படி குழந்தை அழுத விஷயத்தை அவரிடம் தெரிவித்தாள் அவருடைய மனைவி.

"எல்லா விசயமும் தெரிஞ்ச நீயே இப் படிச் சொன்னா, நான் என்ன பண்றது? செலவுக்குக் காசு தேடற விசயம் ஒரு பக்கம் இருக்கட்டும்; முதல்லே நேரம் இருக்கா? நான் சொல்றதைக் கேளு: இன்னும் கொஞ்ச நாளிலே சர்க்கார் என்னைப் போலொத்த கடைக் குமாஸ்தாக் களுக்காக ஏதோ சட்டம் கொண்டு வரப் போறாங்களாம். அப்போ நேரம், காசு எல்லாம் கிடைக்கும்னு தோணுது. அந்தச் சமயத்திலே குழந்தையோட உன்னையும் சேர்த்துக் கூட்டிக்கிட்டுப் போறேன்! என்ன, சரிதானே!" என்றார் மாணிக்கம் பிள்ளை.

"சரி, அதுவரை நான் சாகாம இருக் கேன்!" என்று வெறுப்புடன் சொல்லி விட்டுக் குப்புறப் படுத்துக் கொண்டாள் அவள். ஒரு நீண்ட பெருமூச்சு வரும் வரை அவளையே உற்றுப் பார்த்துக் கொண் டிருந்து விட்டு, மாணிக்கம் பிள்ளையும் படுத் துக் கொள்வதற்காகத் திண்ணைக்குச் சென்று விட்டார்!

அதற்கு அடுத்த நாள்தான் அந்த எதிர் பாராத சம்பவம் நிகழ்ந்தது. வழக்கம் போல் விடிந்ததும் விடியாததுமாகத் தன் கணவரை வேலைக்கு அனுப்பி வைத்து விட்டு, வீட்டு வேலைகளில் இறங்கி யிருந் தாள் மணியின் தாயார்.

காலணாவுக்கு ஆப்பம் வாங்கி வயிறு புடைக்கத் தின்றுவிட்டு, மணி வாசலில் விளையாடிக் கொண்டிருந்தான்.

"அம்மா! பூச்சாண்டி வந்து என்னைப் பிடிச்சுக்கிட்டானே!" என்று திடீரென்று அவன் வாசலிலிருந்தபடியே அலறியதைக் கேட்டதும், "ஐயோ! என்னடா, கண்ணு!" என்று கதறிக் கொண்டே தாயார் வாசலுக்கு ஓடோடியும் வந்தாள்!

முகத்தில் தாடியும் மீசையும் வளர்ந்து பார்ப்பதற்கு விகாரமா யிருந்த ஒரு தரித் திர உருவம் மணியை ஆசையுடன் கட்டிப் பிடித்துத் தூக்கிக் கொண்டிருந்தது!

மணியைப் போல் அவன் தாயாரும் அந்த உருவத்தைக் கண்டதும் பயந்து விடவில்லை;

ரூக மலர்ச்சியுடன், "அவர்தாண்டா, உன் அப்பா!" என்றான்!

"நிஜமாவா, அம்மா! என் அப்பாவா, அம்மா!" என்றான் குழந்தை ஆச்சரியத்துடன்.

"ஆமாண்டா, ஆமாம்!" என்றாள் அவள்.

"அப்படின்னு, இனிமே நான் அப்பாவோடே சினிமாவுக்குப் போவேன், ஹோட்டலுக்குப் போவேன், 'பீச்'சுக்குக் கூடப் போவேன்!" என்று பொங்கி வந்த சந்தோஷத்தில் அடுக்கிக் கொண்டே போனான் மணி.

மாணிக்கம் பின்னை அவனுடைய சந்தோஷத்தில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. "அந்தப் பாவிதான் எனக்கு 'வயசாயிடுச்சு, ஞாபகசக்தி குறைஞ்சு போச்சு'ன்னு வேலையிலிருந்து தள்ளிட்டானே!" என்றார் இரண்டு சொட்டுக் கண்ணீரை உதிர்த்துக் கொண்டே.

"என்ன!" என்று அவள் தூக்கிவாரிப் போட்டவள் போல் கேட்டுவிட்டு, அசைவற்று நின்றாள்!

"ஆமாம், வேறே ஒருத்தன் என்னை வேலைக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய வயசிலே இப்படி வீட்டுக்கு அனுப்பியிருந்தாக்கூட நான் இவ்வளவு வருத்தப்பட மாட்டேன்!" என்றார் அவர்.

"தயா விசயமா, நீ இனிமே பொழைச்சுப் போறதுக்காகக் கொஞ்ச நஞ்சம் பணம் கூடக் கொடுக்கலையா?" என்று கேட்டாள் அவள்.

"அதுகூடக் கேட்டுப் பார்த்தேனே! அந்த மனுசன் சிரிச்சுக்கிட்டே, 'இத்தனை வருசமா உனக்கு நான் வேலை கொடுத்து ஆதரிச்சதற்கு நீதாண்டா எனக்கு ஏதாச்சும் கொடுத்துட்டுப் போவணும்' என்கிறானே!" என்றார் அவர்.

குழந்தை மணிக்கு அப்பாவைப் பார்த்த பிறகு அங்கே நிற்கவே மனமில்லை. 'குதி, குதி' என்று குதித்துக் கொண்டே அவன் வாசலுக்கு ஓடி வந்தான். அவனுக்கு எதிரே அவன் எதிர்பார்த்தபடி சங்கரும் வந்து கொண்டிருந்தான். "டேய் சங்கர்! என் அப்பா வந்துட்டாருடா! இனிமே நான் உன்னைப் போலவே சினிமாவுக்கு, ஹோட்டலுக்கு, 'பீச்'சுக்கு — எல்லாம் போவேன், தெரியுமா!" என்று அவன் சங்கரைப் பயமுறுத்தினான்!

★★★★★★★★★★★-★★★★★★★★★★★★

1947-ம் வருஷத்துக் "கல்கி" சிறுகதைப் போட்டி

முடிவு தேதி 30—9—47

●

முதற் பரிசு:

ரூ. 500

இரண்டாவது பரிசு:

ரூ. 100 விதம் ஐந்து கதைகளுக்கு

●

நிபந்தனைகள்

1. இந்தப் போட்டிக்கு அனுப்பும் கதைகள், தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட புதுக் கற்பனைகளாக இருக்க வேண்டும். ஏற்கெனவே வெளியான கதைகளும், மொழி பெயர்ப்புகளும், தழுவி எழுதிய கதைகளும் இந்தப் பரிசுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டா.

2. கதையின் நீளம் "கல்கி"யில் ஐந்து பக்கம் முதல் பன்னிரண்டு பக்கத்துக்குள் அடங்குவதாயிருக்க வேண்டும்.

3. ஒரே ஆசிரியர் இரண்டு கதைகள் அனுப்பி வைக்கலாம்; அதற்கு மேல் அனுப்பக் கூடாது.

4. சென்ற 1946-ம் வருஷத்துப் போட்டிக்கு அனுப்பிப் பரிசு பெறாத கதைகளைத் திரும்பவும் அனுப்பக் கூடாது. அம்மாதிரிக் கதைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

5. 1947-ம் வருஷம் செப்டம்பர் 30உக்குள் கதைகள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்து சேரவேண்டும். கவரின் மேல் "சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

6. எல்லாவற்றிலும் சிறந்ததென்று பஞ்சாயத்தார் கருதுகிற கதைக்கு முதல் பரிசு ரூ. 500 அளிக்கப்படும். அடுத்தபடியாக ஐந்து கதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ 100 விதம் அளிக்கப்படும். பரிசு பெற்ற கதைகளின் 'காபிரைட்' உரிமை "கல்கி" காரியாலயத்தைச் சேர்ந்தது.

7. பரிசு பெறாத கதைகளில் பிரசுரத்துக்குத் தகுதியான கதைகள் பிரசுரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படும். அவற்றுக்கு உசிதமான சன்மானம் வழங்கப்படும்.

8. முதற் பரிசு பெற எந்தக் கதையும் தகுதியற்றதென்று பஞ்சாயத்தார் கருதினால், பரிசுத் தொகை பஞ்சாயத்தாரின் உசிதம் போல் பிரித்துக் கொடுக்கப்படும்.

9. இந்தப் போட்டி சம்பந்தமான விதிகளை மாற்றவும் திருத்தவும் "கல்கி" ஆசிரியருக்கு உரிமை உண்டு.

10. சந்தேகம் ஏற்படும் எந்த விஷயத்திலும் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

மானேஜர், "கல்கி"

கீழ்ப்பாக்கம், சென்னை

★★★★★★★★★★★-★★★★★★★★★★★★

நீங்கள் இன்று மக்லீன்ஸால் பல் துலக்கினீர்களா?





"துலக்கினேன்" என்றுதான் ஜவாபு



எல்லா கெமிஸ்டுகளிடமும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்

முன்னுக்குவரும் சுறுசுறுப்புடைய இளைஞர்கள் தங்கள் பற்களைப் பராமரிக்க மக்லீன்ஸையே தெரிந்தெடுக்கின்றனர். மக்லீன்ஸ் அரிய சுத்திகரண, பூதிநாசக குணங்கள் வாய்ந்தது. அது உங்கள் வாய்க்கு என்றுமில்லாதோர் புதுமையைக் கொடுக்கிறது. இன்றையிலிருந்து மக்லீன்ஸால் பல் துலக்கி வாருங்கள்.

கஜேந்திரனின் வெற்றி

விஜயம்

கஜேந்திரன் என்னும் யானைக் குட்டியும் மணி என்னும் முயல் குட்டியும் சிநேகமா யிருந்தன. அவைகள் இரண்டும் ஒரே பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஒரே வகுப்பில் படித்து வந்தன.

விளையாடப் போனாலும் சரி, நதியில் குளிக்கப் போனாலும் சரி, கஜேந்திரனும் மணியும் சேர்ந்துதான் போகும். போகிற வழியில் மரக்கிளையில் எட்டாத உயரத்தில் இருக்கும் பழங்களையெல்லாம் கஜேந்திரன் மணிக்குப் பறித்துக் கொடுக்கும்.

நதிக்கரைக்குப் போனபிறகுதான் கஜேந்திரனுக்குத் தான் வீட்டில் மறந்து வைத்துவிட்டு வந்த சோப்புப் பெட்டி ஞாபகத்துக்கு வரும். அதை மணியிடம் சொல்ல வேண்டியது தான்; உடனே மணி காற்றாய்ப் பறந்து சென்று ஒரு நிமிஷத்துக்குள் சோப்புப் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்துவிடும்.

இவ்வளவெல்லாம் இருந்தும், கஜேந்திரனுக்கும் மணிக்கும் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அடிக்கடி சண்டை வந்துவிடும். காரணம் அப்படி ஒன்றும் பிரமாதமான விஷயம் இல்லை.

முயல் குட்டிக்குத் தான் மிகவும் வேகமாக ஓடுகிறோம் என்று ஒரு துளிக் கர்வம் இருந்தது. என்ன இருந்தாலும் ஒரு முயலுக்குச் சரியாக ஒரு யானையினால் ஓட முடியாதல்லவா? அதனால் கஜேந்திரனை அடிக்கடி இது விஷயமாக மணி பரிகாசம் செய்யும். கஜேந்திரனுக்கு அப்போது அவமானமாக இருக்கும். அப்படியே முயல் குட்டியைப் பிடித்துத் தூக்கி ஆகாயத்தில் எறிந்தால் என்ன என்று கூடத் தோன்றும்!


ஒருநாள் மணிக்கு மிகவும் திமிர் ஏறிப் போய் விட்டது. கஜேந்திரனை எப்படியாவது அவமானத்துக்கு உள்ளாக்க வேண்டும் என்று அது தீர்மானித்தது. ஆகவே, அது கஜேந்திரனிடம் வந்து, "இன்றைக்கு ஓட்டப் பந்தயம் வைத்துக் கொள்ளலாமா? நீயும் நானும் ஓடலாம். யார் அந்த மாந்தோப்பு வேலியை முதலில் அடைகிறார்களோ அவர்களுக்குத் தான் ஜயம்!" என்றது.


முயல் குட்டியோடு ஓட்டப் பந்தயம் வைத்துக் கொள்ள கஜேந்திரனுக்குத் தைரியம் இல்லைதான். இருந்தாலும் கௌரவத்தை விட்டுக் கொடுக்க மனம் வரவில்லை.

"இன்றைய தினம் வேண்டாம். எனக்கு ஒரே பசி; காதை யடைக்கிறது. நாளைய தினம் பந்தயத்தை வைத்துக் கொள்ளலாம்!" என்றது கஜேந்திரன்.

முயல் குட்டியும் அதற்குச் சம்மதித்து விட்டது.

கஜேந்திரன் வீட்டுக்குப் போனதும் அதற்கு ஒரே கவலையாய்ப் போய் விட்டது. இரவு முழுவதும் தூங்கா





முயலுக்கு ஆத்திரமும் அவமானமும் தாங்க முடிய வில்லை. மீண்டும் பந்தயம் வைத்து ஓடியது. எத்தனை தடவை ஓடியும் முயல் குட்டியினால் கஜேந்திரனை ஜயிக்க முடியவில்லை. ஒவ்வொரு தடவையும் கஜேந்திரன்தான் ஜயித்தது!

மல் யோசித்தது. பொழுதும் விடிந்தது. சூரியனும் உதித்தது கஜேந்திரனுக்கு ஒரு யோசனையும் 'டக்' என்று தோன்றியது.

உடனே கஜேந்திரன் பக்கத்துக் காட்டுக்குச் சென்று தன் தம்பி கணேசனை அழைத்துவந்தது. கணேசனிடம் ஓட்டப் பந்தயத்தைப் பற்றிச் சொல்லித் தன் யோசனையையும் காதோடு சொல்லி வைத்தது.

பிறகு, கஜேந்திரன் ஓட்டப் பந்தயம் நடக்க வேண்டிய மைதானத்துக்குச் சென்றது. முயலும் வந்து சேர்ந்தது. குறித்த நேரத்தில் பந்தயம் ஆரம்பமாயிற்று. கஜேந்திரன் ஓட ஆரம்பித்தது. முயல் குட்டி ரொம்ப அலட்சியத்துடனும் கர்வத்துடனும் ஓடியது. எப்படியும் தான் கஜேந்திரனை விட முன்னால் போய்விட முடியும் என்னும் மிதமிஞ்சிய தைரியம் தான் காரணம்.


ஐந்து நிமிஷத்துக்குள் முயல் குட்டி இந்தப் பக்கத்துப் புதரிலிருந்து, அந்தப் பக்கத்து மாந் தோப்பு வேலியை அடைந்தது. என்ன ஆச்சரியம்! கஜேந்திரன் வேலிக்குப் பக்கத்தில் முன்பே தயாராய்க் காத்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் முயல் குட்டிக்குக் கொஞ்சம் அவமானமாய்த்தான் இருந்தது.

"சரி, எதிர்ப் புறத்துக்குத் திரும்பிப் போவோம். யார் முதலில் போகிறார்கள், பார்க்கலாம்!" என்றது மணி. கஜேந்திரனும் அதற்கு உடனே சம்மதித்தது.

இந்தத் தடவை முயல் குட்டி காற்றாய்ப் பறந்து எதிர்ப் பக்கத்துப் புதரையடைந்தது. இது என்ன அதிசயம்! முயல் வருவதற்கு முன்பே கஜேந்திரன் அங்கே காத்துக் கொண்டிருந்தது!

ஓயாமல் ஓடியதில் முயலுக்குக் கால்கள் சோர்ந்து விட்டன; மூச்சு திணறியது; அவமானம் தாங்க முடியாமல் தலையும் தொங்கி விட்டது. அதற்குப் பிறகு அது கஜேந்திரனிடம் கர்வமாய்ப் பேசுவதையே விட்டு விட்டது.


கஜேந்திரன் செய்த சூழ்ச்சி இன்றைக்கும் மணிக்குத் தெரியாது. அது தன் தம்பி கணேசனை மாந்தோப்பு வேலிக்குப் பின்னால் மறைந்திருக்கச் சொல்லிவிட்டுத் தான் மட்டும் இந்தப்புறம் நின்று கொண்டது. முயல் ஓட ஆரம்பித்ததும் தானும் கொஞ்சம் ஓடிவிட்டு அது நின்றுவிடும். முயல் அதற்குள் எதிர்ப்புறத்தை அடைந்துவிடும். அங்கே மறைந்திருக்கும் கணேசன் வெளியே வந்து நின்று கொள்ளும். இப்படித்தான் கஜேந்திரன் மணியை ஏமாற்றி விட்டது. மணிக்கு இந்த யுக்தி தெரியாததனால் தான் தோற்று விட்டது.



தகப்பனார்:—என்னடா, உங்க வாத்தியார் எழுத்து தலையெழுத்தாட்டமா இருக்கே! இந்த 'ப்ரோக்ரஸ் கார்டு'லே என்ன எழுதி இருக்காரென்று படிக்கச் சொல்லு!

பையன்:—அது ஒன்றுமில்லே, அப்பா! 'கையெழுத்து நன்றாயில்லே, கவனித்து எழுது' என்று எழுதி யிருக்கிறார்!

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலய கோபுர புனருத்தாரண நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

ஆஸ்தான வித்வான்

மைசூர் டி. சௌடய்யா	...	பிடில்
கல்பாத்தி ராமநாதன்	...	மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன்	...	கடம்

ஞாயிறு 3-8-1947 மாலை 5-30 மணிக்கு

மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூலில்

சென்னை பிரதம மந்திரி ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் தலைமை வகிப்பார்கள்

டிக்கெட்டுகள்: ரூ. 250/: 100/: 50/: 25/: 5/: 2/:

குறிப்பு: ஏற்கனவே இந்தக் கச்சேரிக்காக வழங்கப்பட்ட டிக்கெட்டுகள் செல்லுபடியாகும்

★

ஏ. பார்த்தசாரதி முதலியார், சுவாமிநாத குருக்கள்: நிர்வாகிகள்.

ஒலி பெருக்கி: திருச்சி ரேடியோ ஸேல்ஸ் & ஸர்வீஸ்.



போற்றத்தக்க சேவைதான்

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனதற்கு தீயணைப்பாளரின் தீரமான சேவைதான் காரணம். அதோடு நல்லவேளை, உங்கள் இருப்பிடம் இன்ஷ்யூர் செய்யப்பட்டிருந்தது. இனி நஷ்டஈடு எங்கள் பொறுப்பாகும்.

பிருத்வி பரிபூரண பாதுகாப்பளிக்கிறது.

பிருத்வி இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

12, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை.1.

CP/P/112

கான்ஸ்டேபிளும் காதலும்

சாமுவேல் ஆசீர்வாதம்
ஸேலம்

போட்டிக் கதை—3.

இரவு ஒன்பது மணியிருக்கும். மூன்று ரோடுகள் சேரும் ஒரு சந்தி யருகே வந்து கொண்டிருந்தேன். சிறிய கூட்டம் ஒன்று காணப்பட்டது. விஷயம் என்னவென்று விசாரிப்பதற்காகக் கூட்டத்துக்குள் புகுந்தேன். என் நண்பன் ராஜரத்தினம் (போலீஸ் கான்ஸ்டேபிள் நெ. 82) சைக்கிளுடன் நின்று கொண்டிருந்த பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவனைப் பிடித்துக் கொண்டிருந்தான். விளக்கு இல்லாமல் சைக்கிளில் ஏறி வந்த அந்தப் பயல் ராஜரத்தினத்தினிடம் அகப்பட்டுக் கொண்டான்.

"சின்னப் பையன், தெரியாமல் செய்து விட்டான், ஸார்!" என்றார் ஒருவர்.

"போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து அப்படிச் சொல்லுங்கோ!" என்றான் ராஜரத்தினம்.

"இனிமேல் இப்படி வரமாட்டேன், ஸார்" என்று பையன் பரிதாபமாகக் கெஞ்சினான்.

"இன்றைக்கு வந்ததற்கு என்னடா சொல்லுகிறாய்?" என்று ராஜரத்தினம் சீறினான்.

"இந்த ஒரு தடவை விட்டுடுங்கோ!" என்று பரிந்து பேசினார் ஒரு பெரியவர்.

"நான் விட்டு விடுவேன். சட்டம் அப்படி இடம் கொடுக்காது, ஸார்!" என்றான் ராஜரத்தினம்.

"நீங்கள் சொல்றது சரிதான்; ஆனால் ஏதோ இந்தத் தடவை மாத்திரம் மன்னித்து விடுங்கோ, சின்னப் பையன் பாருங்கோ!" என்றார் முதலில் பேசியவர்.

"இந்த ஒரு தடவை மட்டும் மன்னிச்சுடுங்க!" என்று சிறுவனும் தழுதழுத்த குரலில் கெஞ்சினான். அவன் கண்களில் நீர் வடிய ஆரம்பித்தது. எனக்குத் தாங்க முடியவில்லை. "ராஜரத்தினம்!" என்றேன். அவன் திரும்பிப் பார்த்தான்.

"பையனை விட்டுவிடடா!"

"நீதான் எனக்குச் சம்பளம் கொடுக்கிறாயோ?"

"அடே, சின்னப் பையனைக் கண்டால் பேய்கூட இரங்கும்!"

"பழமொழி தெரியாமல் உளறாதே! பெண்ணைக் கண்டால்தான் பேயும் மனம் இரங்கும், தெரியுமா?"

"பழமொழி எப்படியும் இருக்கட்டும்; பையனைப் போகச் சொல்லு!"

"நீ சொல்லி நான் விட்டுவிடவேணுக்கும்!" என்றான் அவன்.



நான் திகைத்துப் போனேன். இத்தனை நாளாகிறது, நான் சொல்லி அவன் செய்யாத காரியமே கிடையாது. நடுக் காட்டிலே நாங்கள் இரண்டு பேரும் போய்க் கொண்டிருக்கும்போது எதிரே கரடி வருகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். 'நீ மரத்தில் ஏறடா, நான் செத்தவன்மாதிரி படுத்துக் கொள்கிறேன்' என்று சொன்னால், அவன் மறு பேச்சுப் பேசாமல் அதற்குக் கீழ்ப்படிவான். அப்படிப்பட்ட ராஜரத்தினம், இப்போது ஒரு சிறு பையன் விஷயத்

தில் இப்படிப் பிடிவாதம் பிடிப்பது எனக்கு விளங்கவில்லை. "பையன் என்ன பண்ணுவான், பாவம்! அவனுடைய தகப்பனுக்குப் புத்தி வேணும்! ராத்திரி வேளையிலே பிள்ளையைச் சைக்கிளிலே அனுப்புகிறோமே, விளக்கையும் கொடுத்து அனுப்புவோமென்று அவனுக்கு மூளையிலே படலையே!" என்று பெரியவர் முணங்கினார்.

ராஜரத்தினத்தின் காதில் இது விழுந்தது. "ஐயா சொல்லுகிறது ரொம்ப சரி! இந்தப் பையனை 'சார்ஜ்' பண்ணுவது வேறே ஒண்ணுக்குமில்லே ஸார், இவனுடைய அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அக்காவுக்கும் புத்தி வருவதற்குத்தான்!" என்று அவன் சொல்லி விட்டு, பையனுடைய பெயர், விலாசம் முதலியவற்றைக் கேட்டுக் குறிப்பதுபோல் பாவனை செய்தான். பிறகு, "'ஐயோ பாவம்!' என்று உன்னை இந்தத் தடவை விட்டு விடுகிறேன். இனிமேல் ஜாக்கிரதையாய் நடந்து கொள். விஷயத்தை உன்னுடைய அப்பா, அம்மா, அக்கா எல்லாருக்கும் சொல்லணும், தெரியுதா?" என்று பையனைப் பார்த்து அதட்டி விட்டு, கம்பீரமான தொனியில் "கூட்டம் போடாதேயுங்கள்!" என்று 'ஆர்டர்' போட்டான். கூட்டமும் கலைந்தது.

நான் மட்டும் அந்த இடத்தை விட்டுப் போகவில்லை. "ராஜரத்தினம்! உன் 'ட்யூட்டி'யைக் கறாராகச் செய்கிறதெல்லாம் சரிதான். ஆனால் அந்தப் பையனுடைய தகப்பன் பெயரையும் தாய் பெயரையும் தமக்கை பெயரையும் ஏன் எடுக்கிறாய்? ரொம்பப் பிசகான பேச்சு! நீ கான்ஸ்டேபிளாயிருக்கிறதினாலே தாறுமாறாய்ப் பேசி விடலாமென்று நினைக்காதே!" என்று அவனை எச்சரித்தேன்.

நான் சொன்னது அவனுக்கு உறைக்கவில்லை. "சரிதானப்பா, உன் பிரசங்கமெல்லாம் இருக்கட்டும். எனக்கும் ட்யூட்டி முடிந்தது. வீட்டுக்குப் போகலாம், வா!" என்று என் கையைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

"பையனுடைய அப்பா பெயரையும் அம்மா பெயரையும் சந்திக்கு இழுத்தது என்னமோ ஒருவகையாய் மன்னிக்கக் கூடிய விஷயம். அக்கா பெயரை ஏண்டா எடுக்க வேண்டும்?" என்று கேட்டேன் நான்.

"உனக்கு விஷயம் தெரியாதா? அந்தப் பையன் மேலே எனக்கு ஒரு கோபமும் கிடையாது. அவனுடைய அக்காள் மேலே உள்ள கோபத்தைத் தான் அவன் மேலே வைத்துத் தாக்கினேன்!" என்றான்.

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லை" என்றேன்.

"சொன்னால்தான் விளங்கும்!" என்றான் அவன்.

"சொல்லு!" என்றேன்.

"ஒரு கப் டீ சாப்பிட்டால்தான் சொல்ல முடியும்" என்றான்.

ஹோட்டலுக்குள் நுழைந்து இரண்டு கப் டீக்கு உத்தரவு கொடுத்து விட்டு உட்கார்ந்தோம்.

"கலியாணம் செய்யாதவன் கான்ஸ்டேபிள் வேலை பார்ப்பது ரொம்ப ஆபத்து. அதுவும் என்னைப்போல் ட்ராபிக் கான்ஸ்டேபிளாயிருப்பதைப் போன்ற மோசமான வேலை ஒன்றும் கிடையாது. இரண்டு மூன்று ரோடுகள் சந்திக்கும் இடத்திலே நாலு மணி நேரம் நிற்கிறேன். எத்தனை பெண்களைப் பார்க்க நேரிடுகிறது? அதுவும் நான் நிற்கிற இடத்திலே, பஸ் ஸ்டாண்டு வேறே! நடந்து போகிற பெண்கள் அதிகமாய்ப் போனால் மூன்று சிமிஷம்தான் பார்வையிலிருப்பார்கள். பஸ்ஸுக்காகக் காத்து நிற்கிற பெண்களோ, சில வேளைகளில் அரை மணி நேரம் என் பார்வையை விட்டு அகலுவதேயில்லை. கண்டதும் காதல் என்கிறார்களே, இது உண்மையாயிருக்



ரெஸாக்

தால் நான் காதலிக்காத பெண் இந்த நகரிலேயே இருக்க முடியாது. மேலும் கலியாண பவனிகளெல்லாம் என்னுடைய 'பீட்'டைக் கடந்துதான் போகவேண்டும். அப்போது நான் பார்க்கிற பெண்களுக்குக் கணக்கு உண்டா? கண்டதும் காதலிக்கக் கூடிய பதவி எனக்கு இருந்தால், என்னுடைய 'பீட்'டிலே எத்தனை 'ஆக்ஸிடெண்டு'கள் நடந்திருக்குமோ, கடவுள்தான் அறிவார்! என்னுடைய 'பீட்'டிலே ஏதாவது 'ஆக்ஸிடெண்டு'கள் நடந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறாயா? கிடையவே கிடையாது. பெண்களைப் பார்த்து ட்யூட்டியை மறக்கிற ஆசாமி இந்த ராஜரத்தினமல்ல! போன வாரம் அந்த ஆஸ்பத்திரிச் சந்திலே ஒரு பிளஷரும் ஒரு ஜட்காவும் மோதினது ஞாபகம் இருக்கிறதா? அதற்கு என்னவெல்லாமோ காரணம் சொன்னார்களே, உண்மையான காரணம் என்ன தெரியுமா? யாரோ ஒரு பெண் அந்தச் சமயம் பார்த்து அந்தச் சந்திலே வந்துவிட்டாள். அது தான் இரண்டும் 'டாஷ்' பண்ணிக்கொண்டு விட்டது!'' என்றான் ராஜரத்தினம்.

"யாரோ ஒரு பெண் என்றால் யாரப்பா?'' என்று கேட்டேன்.

"ஒரு பெண் என்றால் ஒரு அழகான பெண் என்று அர்த்தம்!'' என்றான் ராஜரத்தினம்.

"அவளைப் பார்த்தது கார் டிரைவரா, ஜட்காக்காரனா, கான்ஸ்டேபிளா?'' என்று கேட்டேன் நான்.

"மூன்று பேரிலே ஒரு ஆள், அல்லது மூன்று பேரும் என்று வைத்துக் கொள்ளேன்'—கதையைக் கேள். கலியாணங்களை



யெல்லாம் கடவுள்தான் முடித்து வைக்கிறார் என்று யாரோ ஒரு பெரியவர் சொல்லியிருக்கிறாராம். அது ரொம்ப வாஸ்தவமென்று எனக்குத் தோன்றுகிறது. கடவுள் பாராத பெண்ணையா நாம் பார்த்து விடப் போகிறோம்? ஆகையினாலே நமக்கு ஏற்ற ஒரு பெண்ணை அவரே பார்த்து முடித்து வைப்பார் என்கிற நம்பிக்கையிலே, நான் ஒரு பெண்ணையும் காதலிப்பதில்லை என்று நிர்மானித்து விட்டேன். அதனாலேதான் நான் ட்யூட்டியிலே நிற்கிறபோது என் பார்வையிலே விழுந்த பெண்களெல்லாம் என் காதலுக்குத் தப்பி விட்டார்கள்!''

"அந்தமட்டும் அவர்கள் பாடு க்ஷேமம் தான்!'' என்றேன்.

"அவர்கள் பாடும் க்ஷேமம்தான்; என் 'பீட்'டிலே வருகிற கார்கள் — வண்டிகள் பாடும் க்ஷேமம்தான்! இந்தப் பெண்களும் கான்ஸ்டேபிள்களை என்னவோ என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். 'யூனிபாரம்' போட்டுத் தொப்பியை மாட்டினதும் எங்களை ஆண்பிள்ளைகளென்று அவர்கள் நினைக்கிறதேயில்லை. ஏதோ ஒரு பொம்மை கையை ஆட்டிக் கொண்டு நிற்கிறது என்று நினைக்கிறார்களோ, என்னவோ! வழியிலே போகிற உதவாக்கரைப் பயல்கள், தூங்குமூஞ்சிகள், சப்பட்டைகளெல்லாம் பார்த்துக் குழைகிறார்கள், கூச்சப் படுகிறார்கள், ஒதுங்குகிறார்கள்! எங்களைக் கண்டால் மட்டும் அந்தக் குழைச்சலும் கூச்சமும் பறந்து போகிறது. நானும் ஒரு ஆண்பிள்ளைதான் என்று காட்டுகிறதற்காக எத்தனையோ தடவை தொப்பியைக் கழற்றியிருக்கிறேன். ஒரு தடவை நாலு பெண்கள்—காலேஜிலே படிக்கிற பெண்கள்தான்—என் பக்கத்திலே வந்து நின்றுகொண்டு சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். நான் மூச்சு விட்டதுகூட அவர்கள் மேலே பட்டிருக்கும், அவ்வளவு பக்கம்! தொப்பியைக் கழற்றிக் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்தேன்......''

"சரி, அப்புறம் என்ன நடந்தது?'' என்றேன்.

"என்ன நடந்தது! எருமை மாட்டுக்குப் பின்னாலே போய் ஹாரன் அடித்தால் என்ன நடக்கும்? அப்படித்தான்! அவர்கள் பாட்டுக்குப் பேச்சும் சிரிப்புமாய் இருந்தார்கள். நான் ஒருவன் அங்கே நிற்பதைக் கவனித்த மாதிரியே தெரியவில்லை!''

"நீ ஆடாமல் அசையாமல் நின்றிருப்பாய்; மரம்தனுக்கும் என்று நினைத்திருப்பார்கள்!" என்றேன்.

"ஆடாமல் அசையாமல் நின்றேனா? தொப்பியைக் கழற்றிக் கைக்குட்டையாலே முகத்தைத் துடைத்தேனென்றுதான் சொன்னேனே!" என்று அவன் என்னை ஒரு அதட்டு அதட்டினான்.

எனக்கு எரிச்சலுண்டாயிற்று. "என்ன வெல்லாமோ கதை அளக்கிறாயே! பையனைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தவன் பெரிய பிரசங்கத்திலே இறங்கிவிட்டாயே!" என்று முணுகினேன்.

"இதுவரை சொன்னதெல்லாம் முகவுரை; இனிமேல்தான் கதை ஆரம்பமாகிறது. இரண்டு விஷயம் இப்போது தெளிவாய்த் தெரிந்திருக்கும். நான் ட்யூடியிலே நிற்கிறபோது எத்தனையோ பெண்களைக் காணவும் காதலிக்கவும் வழியிருந்தும் அப்படி ஒருபோதும் செய்யாமலிருந்தது ஒன்று; யூனிபாரத்திலே நான் நிற்கும்போது பெண்கள் என்னை மதிக்காமற் போனது இரண்டு. இதற்கெல்லாம் அடிப்படையான காரணம், கலியாணம் செய்து வைக்கும் கடமை கடவுளைச் சேர்ந்தது என்ற கொள்கைதான். ஆகவே, காதலிக்கிற வேலையை இதுவரை கடவுளிடமே ஒப்படைத்திருந்தேன்......"

"இதுவரை என்கிறாயே, அப்போ......" என்று ஆரம்பித்தேன்.

உடனே ராஜரத்தினம், "ஆமாம், இப்போ கொஞ்ச நாட்களாய், கடவுளுக்கு அந்தப் பொறுப்பைக் கொடாமல் நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன்!" என்றான்.

"அப்போ ஆக்ஸிடெண்டுகளுக்கு அஸ்திவாரம் போட்டாச்சு என்று சொல்லு!"

"அடே, இந்த ராஜரத்தினம் வித்தியாசமான ஆள் என்பது ஞாபகம் இருக்கட்டும். ட்யூட்டி என்றால் ட்யூட்டிதான்; காதல் என்றால் காதல்தான். ஒன்றுக்கொன்று 'டேஷ்' ஆகிற சமாச்சாரமே கிடையாது!" என்று அவன் அழுத்தமாகச் சொல்லி, மீசையையும் ஒரு பெரிய இழுப்பு இழுத்தான்.

"ஒரே சமயத்திலே, இரண்டு திசைகளிலும் கார்கள் வருகின்றன. அப்போது நீ காதலிக்கிற பெண்ணும் வருகிறாள் என்று வைத்துக் கொள்......"


"இரண்டு கைகளையும் நீட்டினால், இரண்டு ரஸ்தாக்களிலும் வருகிற கார்கள் 'சடன் பிரேக்' போட்டு நிற்கும். என் காதலி கண் மறைவு மட்டும் நீட்டின கை நீட்டின மாதிரிதான் நிற்கும். பிறகு தான் கைகாட்டி இறங்கும். ஒரு தடவை அப்படியே செய்தேன்டா!" என்று பெருமையுடன் அவன் கண்களை உருட்டிக் கொண்டு சொன்னான்.

"எப்போ?" என்று கேட்டேன்.

"ஒரு நாள் அவள் ரஸ்தாவிலே மஞ்சள் நிறப் புடவை கட்டிக் கொண்டு, மங்களகரமான......"

"எவள்?"

"இப்படிக் குறுக்கே குறுக்கே கேள்வி கேட்டால் நான் எப்படிக் கதை சொல்வது? 'எவள்?' 'எப்போ?'—கேள்வியைப் பார், கேள்வியை!—இன்றைக்கு ஸைக்கிள் லைட் இல்லாமல் அகப்பட்டுக் கொண்டானே, அந்தப் பயலுடைய அக்காள்





பதிலுக்கு ஒரு புன் சிரிப்புக் காட்டினாள். மறு கணம் தலையைக் கவிழ்த்து கொண்டாள்; உடம்பை ஒடுக்கினாள்; சேலை முந்தானையால் தன் உடம்பை இறுகச் சுற்றினாள்; தான் நடந்து சென்ற திசையையே மாற்றினாள். சுருக்கமாய்ச் சொன்னால் என்னைக் கண்டு அவள் வெட்கப்பட்டாள்! போதாதா? ஒருபோதும் நான் காணாத காட்சி! என்னை ஒரு பெண் ஆடவனென்று மதித்து விட்டாள்; கான்ஸ்டேபிளானாலும் ஒரு கண்யமான புருஷன்தான் என்று எண்ணி நாணி ஒதுங்கி நடந்தாளே, புண்ணியவதி! அவளுக்கு நான் என்ன கைம்மாறு செய்யக் கூடும் என்ற ஒரு நன்றியறிதலான உணர்ச்சி என் உள்ளத்தில் தோன்றிற்று. நான் செய்யக்கூடிய பிரதி உபகாரம் அவளைக் காதலிப்பதே என்று நிர்மானித்து விட்டேன். இந்தத் நிர்மாணம் பிறந்த பிறகு அவளுடைய முகம் என் கண்களில் படவில்லை. அவளுடைய நடை யழகைப் பார்த்தேன். ஆஹா, என்ன நடை! 'அன்ன நடை' என்று கவிகள் உவமானம் சொல்லுகிறார்கள். அன்னத்தை நான் பார்த்தது கிடையாது. கவிகளும் பார்த்திருக்க மாட்டார்கள். சும்மா எதை யெல்லாமோ உவமானித்து எழுதுகிறார்கள். அவளுடைய நடை எப்படி இருந்தது, தெரியுமா? 'கான்க்ரீட்' போட்ட ரோட்டிலே புது 'பிளஷர் கார்' போனமாதிரி! அன்றைக்கு ஆரம்பித்தது என் காதல்!"

"என்று எத்தனை தடவை சொல்லணும்?" என்று சீறினான் ராஜரத்தினம்.

இதற்கு நான் என்ன சொல்வது? கேள்வி கேட்டதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். அவனுடைய காதல் கதையை ஆரம்பத்திலிருந்து சொன்னால் நடுவில் நான் பேசவில்லையென்றும், கேட்க வேண்டிய கேள்விகளைக் கடைசியிலே கேட்டுக் கொள்வதாகவும் வாக்குக் கொடுத்தேன். ராஜரத்தினம் மறுபடியும் ஆரம்பித்தான்:

"மூன்று வாரத்துக்கு முன் ஒரு புதன்கிழமை நடுப்பகல் பன்னிரண்டு மணியிருக்கும். நடுரோட்டில் அவள் நடந்து வந்தாள். அதுவரை எல்லாப் பெண்களையும் பார்த்தது போல்தான் அவளையும் பார்த்தேன். ஒரு அழகான படம், ஒரு பெரிய உத்தியோகஸ்தர், ஒரு விலையுயர்ந்த கார் — இவற்றை எப்படிப் பார்ப்பேனோ, அதே மாதிரிதான் அவளையும் பார்த்தேன். அவளும் என்னைப் பார்த்தாள். ஆனால் மற்றப் பெண்கள் என்னைப் பார்த்தது போல் அல்ல; ஊர்ந்து விழுடி என்னை முறைத்துப் பார்த்தாள். பொம்மையோ அல்லது உயிருள்ள உருவமோ என்ற சந்தேகம் அந்தப் பார்வையில் புலப்பட்டது. ஒரு புன் சிரிப்புக் காட்டினேன். அவளுடைய சந்தேகம் பறந்து விட்டது போலும். அவளும்

இந்தச் சமயத்தில் ராஜரத்தினம் தன் டம்ளரை மேஜைமீது கவிழ்த்து வைத்தான். நான் உடனே இன்னும் இரண்டு கப் டீக்கு ஆர்டர் கொடுத்தேன்!

மீண்டும் ராஜரத்தினம் ஆரம்பித்தான்:

"அவளைப் பற்றிய விவரங்களை அறிய மூன்று நாட்கள் பிடித்தன. பெண்ணுடைய பெயர் மரகதம். தகப்பனார் ஒரு வக்கீல் குமாஸ்தா. மரகதம் எட்டாவது வகுப்பு வரை படித்தவள். ஒரு தமக்கையும் இரண்டு தம்பிமாரும் உண்டு. தமக்கைக்குக் கலியாணம் ஆகிவிட்டது. நேரிலே தகப்பனாரிடத்தில் போய்க் கேட்கலாமென்று யோசனைதான். ஆனால் மரகதத்தின் கருத்தை முழுவதும் அறிந்துவிட வேண்டுமல்லவா? ஆகவே அவளைச் சந்திக்க வழி

புண்டா என்று வகை பார்த்துக் கொண்டிருந்தேன். அதற்கு ஒரு சந்தர்ப்பமும் கிடைத்தது. ஒரு நாள் சந்தையிலே காய்கறிக் கடை யருகே நிற்கும்போது அவனைப் பார்த்தேன்.

"'அவரைக்காய் என்ன விலை?' என்று அவன் கேட்டான்.

"'அணாவுக்கு இரண்டு பலம்' என்று கடைக்காரன் சொன்னான்.

"அவன் மெதுவாக நழுவப் பார்த்தான்.

"'நில்லம்மா!' என்றேன்.

"அவன் நின்றுவிட்டான். என் நெஞ்சுத் துடிப்பும் நின்று விட்டது! கடைக்காரனை நாலு பலம் போடச் சொல்லி, அவனிடம் ஓரணாவை வாங்கி, கடைக்காரனுக்கு இரண்டணா கொடுத்தேன்! நான் அப்போது வேஷ்டியும் சட்டையும் போட்டிருந்ததால், அவன் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லையோ என்று சந்தேகம் உண்டாயிற்று. நான் யார் என்பதை அவனிடம் சொன்னேன்.


"'அப்படியா?' என்றான்.

"'இன்று சாயந்திரம் அதே இடத்தில் நாலு மணியிலிருந்து எட்டு வரைக்கும் ட்யூட்டி!' என்று முடிப்பதற்குள் அவன் போய் விட்டான்.

"அந்தச் சந்தைக் கும்பலுக்குள்ளே மறைவதும் தோன்றுவதுமாக ஒரு நொடிப் பொழுதில் அவன் என் பார்வையை விட்டு அகன்று போனான். ஆஹா, என்ன கடை என்கிறாய்!' என்று வியந்தபடி அவன் ஒரு நிமிஷம் மௌனம் சாதித்து விட்டு, "நீ ரொம்ப ரொம்ப ஸயன்ஸ் படித்திருக்கிறாயே, இந்தப் பூமி எப்பவும் ஒரே வேகத்திலேதான் சுற்றுமா? அல்லது சில வேளைகளில் மெதுவாகவும் சுற்றுமா?" என்று அவன் கேட்டான்.

"எப்போதும் ஒரே வேகத்திலேதான் சுற்றுகிறது!" என்றேன் நான்.

"எனக்கென்னவோ அதைப் பற்றிக் கொஞ்சம் சந்தேகம் தான். அன்றைக்கு மாலை நாலு மணிக்கு நான் என்னுடைய வீட்டிலே நின்றேன். அடேயப்பா! நேரம் போகவே யில்லை! பூமிதான் அப்போது கொஞ்சம் வேகத்தைக் குறைத்துக் கொண்டிருக்கும் என்று இன்றைக்கும் நம்புகிறேன். மணி ஐந்தடிக்க எவ்வளவு நேரமானது! ஐந்து மணிக்கு அவன் வந்தான்! அவனை பர்லாங் தூரத்திலே வரும்போதே பார்த்து விட்டேன். ஆசை தீர அவனைப் பார்த்து விடலாம் என்று உள்ளும் உச்சியும் குளிர்கிற நேரத்திலே, சண்டாளன்கள் வந்து விட்டான்கள்! ஒரு பிளஷர், ஒரு பஸ், இரண்டு ஜட்கா, மூன்று சைக்கிள்!— பாவிப் பயல்கள் ஆளுக்கு ஒரு திசையிலிருந்து வந்தான்கள்! சட்டென்று இரண்டு கைகளையும் தூக்கி விட்டேன், 'ஹெய்ல் ஹிட்லர்!' என்றாற் போல! 'சடன் பிரேக்' போட்டு நின்றார்கள்!—அந்த ரஸ்தாவிலே பஸ்ஸும் இரண்டு சைக்கிள்களும், அடுத்த ரஸ்தாவிலே பிளஷரும் ஒரு ஜட்காவும், பின்னாலே ஒரு ஜட்காவும் இரண்டு சைக்கிள்களும். இப்படி மூன்று நிமிஷம் ட்ராபிக் எல்லாவற்றிற்கும் முற்றுப் புள்ளி போட்டு விட்டேன். போட்டு என்ன பிரயோஜனம்? மரகதத்தைக் காணோம்! எப்படி மாயமாய்ப் போனானோ தெரியவில்லை. ஒரு வேளை கடைகளுக்குள்ளே போயிருப்பான் என்று எட்டிப் பார்த்துக் கொண்டே நின்றேன். கைகளை இறக்கவில்லை. ஹாரன் அடித்தான்கள், ஊளை விட்டான்கள், மணி யடித்தான்கள்—'மரகதம் இல்லை' என்று கண்டபிறகுதான் கைகளைக் கீழே போட்டேன். டிரைவர்களும் ஜட்காக்காரர்களும் என்னவெல்லாமோ முணகிக் கொண்டே போனார்கள். அதைப் பற்றி நான் கவலைப் படவில்லை. மரகதம் என்னை எட்டிக் கூடப் பார்க்கவில்லையே என்றுதான் என் மனம் சஞ்சலப்பட்டது. ஒரு வேளை வெட்கப்பட்டுப் போய் விட்டானோ என்னமோ



என்று நினைத்தேன். இந்த நினைவெல்லாம் ஒரு நொடிப் பொழுதுதான். மறுகணம் மரகதம் வந்த திசையைக்கூட எட்டிப் பாராமல் என்னுடைய வேலையைக் கவனிக்க ஆரம்பித்தேன். என் யோசனை கொஞ்சம் நீண்டிருக்குமானால் ஒரு சைக்கிள் ஒரு லாரியோடு மோதியிருக்கும். ட்யூட்டி என்றால் ட்யூட்டிதான்; காதல் என்றால் காதல்தான்!


“டீயும் முடியப் போகிறது; கதையைச் சுருக்கி விடுகிறேன். இரண்டு மூன்று நாட்களாக மரகதத்தையும் மரகதத்தின் வீட்டையும் சுற்றிச் சுற்றி வந்தேன். அவளைப் பார்க்கும்போதெல்லாம் ஏதாவது பேசாமல் விடுவதும் இல்லை. ஒரு நாள் ‘அப்பா சுகம்தானா?’ என்று கேட்டேன். ‘சுகம்தான்!’ என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே போய் விட்டாள். ‘இன்னொரு நாள் அம்மா சுகந்தானா?’ என்று கேட்டேன். சுகம்தான்’ என்று சொல்லி நழுவி விட்டாள். மூன்றாவது நாள் ‘பெரிய தம்பி சுகமா?’ என்று கேட்டேன்—இன்றைக்கு அகப்பட்டானே அந்தப் பயல்தான். ‘ஆமாம்’ என்று சொல்லுகிற பாவனையாகத் தலையை ஆட்டினாள். ‘சின்னத் தம்பி சுகம் தானா?’ என்ற கேள்வியை மறுநாளைக் கென்று தயாராய் வைத்திருந்தேன். கேட்கச் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை.

“நேற்றுக் காலையிலே என்னுடைய இடக் கண் துடித்தது. ‘இன்பம் வருகுதென்று சொல் சொல், சொல், கிளியே!’ என்று பாடிக்கொண்டே கிளம்பினேன். ‘என்றும் மங்களமே உண்டாக. என்றும் மங்களமே!’ என்று ஒரு பையன் பாடிக் கொண்டு போனான். மணி அடித்தது. “இன்றைக்கு நல்ல நாள் ஸார், எடுத்த காரியம் கை கூடும்” என்று ஒருவர் இன்னொருவரிடம் சொல்லிக் கொண்டு போனார். என் மனம் பரவசமாகி விட்டது. தூரத்தில் போன பிச்சைக்காரனைக் கை தட்டிக் கூப்பிட்டுக் காலணா போட்டேன். இரண்டு பேர் ஒரு சைக்கிளில் ஏறிக்கொண்டு வந்தார்கள். என்னைக் கண்டதும் ஒருவன் இறங்கினான். ‘இறங்க வேண்டாமப்பா, சும்மா ஏறிப் போ, தம்பி!’ என்று அவனைத் தைரியப் படுத்தினேன். ராஜரத்தினமாவது, இப் படிச் சொல்லுகிறதாவது என்று உனக்கே திகைப்பா யிருக்கிறதல்லவா! சைக்கிளில் இருந்தவனும் அப்படியே திகைத்துப் போய்க் கீழே இறங்கி விட்டான். கலியாண பாண்டு வாத்தியம் தூரத்திலே முழங்கிற்று. ஆனந்தசாகரத்தில் ஆழ்ந்து போவதாகச் சொல்லுகிறார்களே, அது எப்படி ஆழ்ந்து போக முடியும் என்று நான் அடிக்கடி யோசித்திருக்கிறேன். நேற்று அந்தக் கலியாண பாண்டு முழக்கத்தைக் கேட்டதும் உண்மையிலேயே அப்படி ஆழ்ந்து போனேன். பூமிமேலே நிற்கிறதாகவே எனக்குத் தெரியவில்லை. சொப்பனம்தான் காண்கிறேனோ என்று நினைத்தேன். கலியாணப் பவனி என் பக்கத்தில் வந்த பின்தான் என் சுய நினைவு எனக்கு வந்தது. நல்ல வேளை! அப்படிச் சுய புத்தி வரா திருந்தால் மினைடூர்களும் பஸ்களும் கலி யாணக் கும்பல் மேலே மோதி பெரிய ‘ஆக்ஸிடெண்ட்’ ஒன்று ஏற்பட்டிருக்கும். யார் கண்டது, மாப்பிள்ளையும் பெண்ணும் இருந்த குதிரை சாரட்டின் மேலே, அந்த முப்பத்திரண்டு சீட் பஸ் மோதியிருக்கா தென்று!

“கலியாணக் கோலத்தில் வந்த பெண் இருந்த வண்டி என் பக்கத்தில் வந்தது. பெண்ணை எட்டிப் பார்த்தேன். பெண் யாரென்று நினைக்கிறாய்? மரகதமேதான்! அந்தப் பெயரை வாயாலே உச்சரிக்கவும் கூசுதடா! எனக்குப் பிறக்கப் போகிற பெண் பிள்ளைக்குக்கூட அந்தப் பெயரை வைக்க மாட்டேன்! என்னடா பிறவிகள், இந்தப் பெண்கள்! சேலை கட்டிய மாதரை நம்பினால் என்னவெல்லாமோ பண்ணு மென்று ஒருவன் பாடியிருக்கானே, அவன் என்னைப் போல இப்படி ஏமாந்த பேர்வழியாகத்தான் இருக்க வேண்டும்! சந்தையிலே கொடுத்த ஓரணா அபராதம், பிச்சைக்காரனுக்குக் கொடுத்த காலணா, சைக்கிளில் ‘டபிள்ஸ்’ போன பயல்களை ‘சார்ஜ்’ பண்ணாமல் விட்டது-இப்படி இந்த மரகதத்துக்காகச் செய்த தியாகங்களை நினைத்தால் வயிறு எரியுதடா! அந்த முப்பத்திரண்டு சீட் மோட்டாரைக் கலியாண கும்பலுக்குள்ளே மோதவிடாமல் பண்ணி னது மகா பெரிய மூடத்தனம்! — இனி மேல் என்னடா ம. வேண்டிக் கிடக்குது!” என்று சொல்லிக் காலி டம்ளரைத் தடா லென்று மேஜைமேல் வைத்துவிட்டு ராஜ ரத்தினம் எழுந்து விட்டான்.

“அந்த வயிற்றெரிச்சலிலேதான் இன் றைக்கு அந்தப் பையனை இந்தப் பாடு படுத் தியிருக்கும்!” என்றேன்.

“அடே, எனக்கு எப்போதுமே காதல்னு காதல்தான்; ட்யூட்டின்னு ட்யூட்டிதான்!” என்று ஆணித்தரமாகச் சொல்லிக் கொண்டே அவன் வெளியே சென்றான்.



அபிவிருத்தியில் பங்காளிகள்

நவயுக வாயிற்படிமீது காலூன்றி, நாம் இன்றைய பாரதநாட்டில் மாபெரும் மாறுதல்களை நேருக்கு நேர் கண்ணுறுகிறோம். வலிமையும் ஒன்றிப்பு மோங்கி, மேலான இருக்கை, உணவு . . . உடுக்கை வசதிகளுடன் சிறந்து விளங்குமோர் தேசமாகும் நம் கண்முன் நிகழ்வது. அப்படிப்பட்ட நாளைய நாட்டிலும் பக்கிங்ஹாம் & கர்னடிக் மில்லுகளின் நீடித்துழைக்கும், கவர்ச்சிவாய்ந்த, உயர்ந்த நெசவுத் தரங்களுக்கு நல்ல கிராக்கி யிருக்கத்தான் செய்யுமென்கிற நம்பிக்கை மேன்மேலும் எங்கள் அபிவிருத்திக்குத் தூண்டுகோலாக அமைகிறது.

இன்று ரசாயனங்களுக்கும், சாயங்களுக்குமுள்ள பஞ்சம் எங்கள் உற்பத்தியை மட்டுப்படுத்தியே வருகிறது - ஆவசிய துணி தினுசுகள் மட்டுமே எங்களால் இப்பொழுதும் தயாரிக்க இயலுகிறது. ஆனால் அந்நெசவுத் தரங்கள், எழுபதாண்டுகளாக எங்கள் தயாரிப்புகளைச் சிறப்பித்துள்ள நேரிய தன்மையிலும், உழைப்பிலும், யாவற்றிற்கு மேலான பெறுமதியிலும் இஞ்சித்தேனும் குறைபாடுகளின்றியே விளங்குகின்றன.

இப்பொழுது கிடைக்கும் சொற்ப துணிமணிகளை கூடுமான காலம் உழைக்கச் செய்ய வேண்டியிருப்பதால், நீங்கள் இந்தப் பெயர்போன வர்த்தக முத்திரைகளுடைய டிக்கள், டவல்கள், லாங்க்லாத், ஷர்ட்டிங்குகள், கோட்டிங்குகள், டைகோர்க்ள் ஆகியவைகளை வாங்குவது முன்னெப் பொழுதையும் விட ஆவசியமாகிறது:

பக்கிங்ஹாம் & கர்னடிக் மில்ஸ் (சென்னை)

மானேஜிங் ஏஜண்டுகள்: **பின்னி & கோ. (சென்னை) லிட்.**

நரம்புகள் உங்களை தூங்கவிடாமல் விழித்திருக்கும்படி செய்யும்பொழுது



சுக நித்திரை இல்லாத இரவுகள் உங்கள் ஆரோக்கியத்துக்கு விரைவில் ஹானி விளைவிக்கின்றன. தினம் காலையில் பலக் குறைவில்லாமலும், உற்சாகமாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்க நீங்கள் இரவு தோறும் அயர்ந்த சுக நித்திரை அநுபவிக்கவேண்டும். இதனால் நீங்கள் உங்களுடைய நரம்புகளை சரியான நிலைமையில் வைத்திருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது.

உங்கள் தேகத்தையும் மூளையையும்போல் நரம்புகளுக்கும் போஷாக்கு தேவை. இதை நறுமணமுள்ள ருசிகரமான டானிக் உணவு பானமான "ஓவல்டின்" அளிக்கிறது. படுக்கைக்குப் போகுமுன் ஒரு கோப்பை "ஓவல்டின்" அருந்துங்கள். நரம்புகளை சமனப்படுத்தி, காலையில் பலக் குறைவில்லாமலும், உற்சாகமாகவும், சுறுசுறுப்புடனும் எழுந்திருக்கச் செய்யும்படியான அயர்ந்த நித்திரை அளிப்பதில் அது நிகரற்றது.

"ஓவல்டின்" பழுத்த பார்லிமால்ட், புதிய முட்டை கூடிய பசுவின்பால், விலை மதிப்புள்ள இயற்கை விட்டமின்கள், மற்றும் இதர ஆகார சத்துக்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. உங்களை வீர்யமும் ஆரோக்கியமும் உள்ளவர்களாக இருக்கச் செய்யவேண்டிய ஆகார சத்துக்களை அது உடையது. போலிகளை விலக்குங்கள்.

விநியோகஸ்தர்கள்:
கிரஹாம்ஸ் ட்ரேடிங் கோ (இந்தியா) லிமிட்., த. பெ. நெ. 1205, மதராஸ்: பம்பாயிலும், கல்கத்தாவிலும்;
தி இங்கிலீஷ் & ஸ்காட்டிஷ் ஜாயிண்ட் கோவாப்ரேடிவ் ஹோல்சேல் சொஸைடி லிட்., கள்ளிக்கோட்டை (மலபார் கோஸ்டுக்கு)

'ஓவல்டின்'

'OVALTINE பலவிருத்தி ஆகார பானம்'



"ஓவல்டின்" அயர்ந்த சுக நித்திரையை அளிக்கிறது.

OV/135



கம்பர் தரும் காட்சி

183. தொலைய வேண்டும், அரக்கர்கள்!

★

மனைவியை இழக்க நேருகிறதென்றால் சாமானிய காரியமல்ல. சாமானிய மனுஷனுக்கு இந்த விபத்து நேர்ந்திட்டாலே அவமானத்தால் உள்ளம் உடைந்து போகும். சக்கரவர்த்தித் திருமகனுக்கு நேர்ந்து விட்டால் அதைப் பற்றிச் சொல்ல முடியுமா?

ஜடாயுவுக்கு அதைப் பற்றிப் பேசவே நா எழவில்லை. ஏதோ விஷயத்தைத் தொடாதபடி ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லிப் பார்க்கிறான்:

"அற்புதம் எதையாவது ஒருவன் இந்த உலகத்தில் செய்துவிட முடியுமா, முடியாது. நம்முடைய பிறவியைப் பற்றி அவ்வளவாகப் புகழவும் முடியாது. இந்தப் பிறவியில் இன்ப துன்பங்கள் எத்தனையோ வந்து நேருகின்றன. இந்த இன்ப துன்பங்கள் எல்லாம் விதி ஏற்படுத்தியதே ஒழிய வேறு யாரும் ஏற்படுத்தியதல்ல என்பது உண்மை. இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுவது நமது கடமை.

அதிசயம் ஒருவரால்
அமைக்க லாகுமோ!
துதி அறு பிறவியின்
இன்ப துன்பந்தான்,
விதிவயம் என்பதை
மேற்கொ ளல்கடன்;
மதியினால் விதி அதை
வெல்ல வல்லமோ!

[அதிசயம்: காரண காரிய நியதிப்படி சகல காரியங்களும் நடக்க, அதை ஏதோ மீறிச் செய்வதாகச் சொல்லும் அற்புதச் செயல்; துதி அறு பிறவியின்: பாராட்டுக்கு உரியது அல்லாத இந்தப் பிறவியின்; மேற்கொளல் கடன்; மனசில் பதிய வைத்தல் கடன்; மதியினால் விதியதை வெல்ல வல்லமோ: எவ்வளவு முன் யோசனை இருந்தாலும் விதியை வெல்ல முடியுமா நமக்கு: முடியாது.]

"யாருக்கும் கெட்ட காலம் வருவது இயல்புதான். சூரியனையே விழுங்கி விட்டுப் போகவில்லையா, ஒரு பாம்பு?"

'பொங்குவெங் கோள்அரா,
விசும்பு பூத்தன்ன
வெங்கதிர்ச் செல்வனை
விழுங்கி நீங்குமால்
அங்கண்மா ஞாலத்தை
விளக்கும் ஆய்கதிர்த்
திங்களும் ஒருமுறை
வளரும் தேயுமால்.'

[பொங்கு வெங்கோள் அரா: வாயைத் திறந்து வருகிற அந்தப் பொல்லாத பாம்பு; விசும்பு பூத்தன்ன வெங்கதிர்ச் செல்வனும்: ஆகாயத்தில் செந்தாமரை பூத்தது போல் உதிக்கும் சூரியனை; விழுங்கி நீங்குமால்: விழுங்கிவிட்டுப் போகவில்லையா; அங்கண்மா ஞாலத்தை விளக்கும்: இந்தப் பரந்த பூமியில் இருளை நீக்கி ஒளியைப் பரப்பும்; ஆய்கதிர்த் திங்களும்: தெளிந்த நிலவை வீசும் சந்திரனும்: ஒரு முறை: நிச்சயமாக.]

•••

"வெகு தூரம் போவானேன்? சம்பரன் என்ற அவுணனால் வச்சிராயுதம் ஏந்திய அந்த இந்திரனுக்கு அவ

மானம் வந்த காரியம் எனக்குத் தெரியுமே! அந்த அவமானத்தை நீக்க முடிந்தது, உன் தந்தையின் தோள் வலியால்த்தானே?"

'தடைக்கரும் பெருவலிச்
சம்ப ரப்பெயர்க்

கடைத்தொழில் அவுணனைக்,
கலிசக் கையினன்

படைத்தனன் பழி அது,—
பகழி வில்லவாய்!

துடைத்தனன் உந்தை,தன்
குவவுத் தோளினால்.'

[தடைக்கு அரும் பெரு வலி: தடுக்க முடியாத பெருஞ் சக்தி வாய்ந்த; சம்பரப் பெயர்க் கடைத் தொழில் அவுணனை: சம்பரன் என்ற ஏதோ ஒரு பெயரோடு, கேடான தொழில் செய்து வந்த அரக்கனை; கலிசக் கையினன் படைத்தனன் பழி: வஜ்ராயுதத்தையே ஏந்திய அந்த இந்திரன் அல்லவா அவமானத்துக்கு உள்ளானான். அந்த அவமானத்தை; பகழி வில்லவாய்: அம்பு எய்தலில் சிறந்த வில் தொழிலில் வல்ல ராமனே: துடைத்தனன் உந்தை, தன் குவவுத் தோளினால்: உன் தந்தையாகிய தசரதன் தன் தோள்வலியால் நீக்கினான் — இந்திரனது அவமானத்தை.]

குறிப்பு:—'யாருக்கும் அவமானம் ஏற்படக் கூடும். ஆனால் அதைத் துடைக்கவும் கூடும். உன் தந்தை துடைக்கவில்லையா? ரொம்ப வருத்தத்துக்கு உள்ளாக வேண்டாம்!' என்பது பாவம்.

* * *

நான் கண்ட காட்சியை, அதாவது சீதையை ராவணன் தூக்கிக் கொண்டு போன காட்சியை, ராமனிடம் சொல்ல ஜடாயுவுக்கு மனம் துணியவில்லை; யாருக்குத்தான் சொல்ல முடியும்! உள்ளம் ரொம்பத் தயங்குகிறது. எப்படியோ மனசைத் திடப்படுத்திக் கொண்டு, ஒரு சாய்வான போக்கில் சொல்லுகிறான். "சீதையைப் பிரியவுற்றதன் காரணம் தெரிகிறது எனக்கு. தர்மம் சிதைவுண்டு போய்விட்டது; தேவர்களும் துயரத்துக்கு உள்ளாகி விட்டார்கள்; பின்னே என்ன? அந்த அறமும் தேவர்களது துயரமும் சேர்ந்துதான் இந்தத் துன்பத்தை விளைத்திருக்கின்றன."

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

'பின்னைச்சொல் கிளிஅன்ன ளைப்
பிரிவுறல் உற்றபெற் றி,
தன்னுற்ற அறமும்தே வர்
துயரமும் தந்ததே யால்:
கள்ளப்போர் அரக்கர்என் னும்
களையினைக் களைந்துவாழ் தி!
புள்ளிற்கும் புலவிப்பேய்க் கும்
தாயன்ன புலவுவே லோய்!'

[பின்னைச் சொல் கிளி அன்னளை: குழந்தை போலும் சொல்லுடைய கிளி போலும் சீதையை; பிரிவுறல் உற்றபெற்றி: பிரியும்படி நேர்ந்த காரியம்; தன்னுற்ற அறமும்: புறக்கணிப்பட்ட தர்மமும்; தேவர் துயரமும்: அரக்கர்களால் தேவர் படுகிற துன்பமும் சேர்ந்து; தந்ததேயால்: செய்த காரியந்தான்; கள்ளப் போர் அரக்கர் என்னும்: கள்ளத்தனமாகவே போர் செய்து வந்திருக்கிற அரக்கர் என்னும்; களையினைக் களைந்து வாழ்தி: உலகத்துக்குக் களையாயிருக்கிற அவர்களைக் களைந்து வாழ்வாயாக; புள்ளிற்கும் புலவிப் பேய்க்கும்: போர்க்களத்தில் வந்து மொய்க்கும் பருந்து கழுகு முதலிய பறவைகளுக்கும் பசித்தறிவில்லாத பேய்களுக்கும்; தாயன்ன புலவு வேல்: தாய் ஊட்டுவது போலப் பிணங்களைக் கொண்டு ஊட்டும் வேலையுடைய; வேலோய்: அத்தகைய வேலைக் கையில் ஏந்திய வீரனே!]

சீதா பிராட்டியைப் பிரிய நேர்ந்ததற்குப் புறக்கணிக்கப்பட்ட தர்மந்தான் காரணம், தேவர்களுடைய துயரந்தான் காரணம் என்று சொல்லவேண்டியதைத் தவிர்த்துச் சொல்வதற்கு வேறு ஒன்றும் இல்லையென்று ஜடாயு பேச்சை முடித்து நிறுத்துகிறான்.

சிறிது நேரங் கழித்து ஏதோ சம்பந்தம் இல்லாத மாதிரி பொது தர்ம நெறி என்பது போல, "அப்பா, ராமா! அரக்கர்கள் தொலைய வேண்டும். அப்போதுதான் தர்மமோ, முனிவர்களோ, மக்களோ க்ஷேமமாய் வாழலாம்" என்று பேச்சை முடிக்கிறான்.



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த் | மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

எல்லோரும் தேநீர் அருந்தி முடித்தனர். ஆனால் எப்பொழுதுமே கடுவன் பூனை மாதிரி முகத்தை வைத்துக் கொண்டிருக்கும் அந்த வக்கீலுக்கெதிரே சிரித்துப் பேசுவதற்குப் பத்மா, ரமாநாத் இருவருமே சற்றுத் தயங்கினர். சிரித்துப் பேசிப் பரிகாசம் செய்யும் ஆசாமிகள் கிழவர்களா யிருந்தால்கூடப் பொழுது போய்விடும். வறட்சியே உருவெடுத்த — உயிர்ப் பிணம்போல் உட்கார்ந்திருக்கும் மனிதர்கள் — வாலிபர்களா யிருந்தாலும் அவர்களுடன் பேசக்கூடப் பிடிக்காது. ஆகவே பத்மாவும் ரமாநாத்தும் வாய் திறக்காமல் மௌனம் சாதித்தனர்.

இதைக் கண்ணுற்ற ரத்தன், "வா, நாம் போய்த் தோட்டத்தில் உலாவிவிட்டு வருவோம். இவர்கள் இரண்டு பேரும் இங்கே உட்கார்ந்து கொண்டு, சமூகத்தையும் நீதியையும் பற்றிப் பேசிக்கொண்டு கிடக்கட்டும்!" என்று பத்மாவை அழைத்தாள்.

பத்மா, கழுத்தை இறுக்கிக் கொண்டிருந்த தூக்குக் கயிற்றினிடமிருந்து விடுபட்டவன் போன்ற உணர்ச்சியுடன் தோட்டத்துக்குப் புறப்பட்டான்.

ரமாநாத் கூட்டினுள் அடைபட்டிருந்த பட்சியைப் போல, அறையி லிருந்து வெளியே போய்க் கொண்டிருக்கும் அவ் விருவரையும் ஒரு முறை பார்த்துப் பெருமூச்சு விட்டான். இந்தமாதிரிச் சிறைக்கு ஆளாக வேண்டி யிருக்கும் என்று தெரிந்திருந்தால், அவன் இங்கு வந்துகூட இருக்கமாட்டான்!

வக்கீல் முகத்தைச் சுளுக்கிக்கொண்டே, "வயிற்றில் என்ன கோளாறு என்றே தெரியவில்லை. எதுவும் ஜீரணமாவதில்லை. பால்கூட ஜீரணிப்பதில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். எல்லாரும் இவ்வளவு ஆசையுடன் இந்த டீயைக் குடிக்கிறார்களே! இந்த டீயைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. வாந்தி பண்ண வருகிறது!" என்றார்.

"நீங்கள் ஜீரணத்துக்கு ஏதாவது மருந்து சாப்பிட்டுப் பார்த்தீர்களோ?" என்று கேட்டான் ரமாநாத்.

வக்கீல் பேச்சில் ஒருவித அசுவாரஸ்யம் தொனிக்க, "இந்த மருந்துகளிலேயே எனக்குக் கொஞ்சம்கூட நம்பிக்கை கிடையாது. இந்த டாக்டர்களையும், வைத்தியர்களையும் போன்ற முட்டாள்கள் இந்த உலகத்தில் வேறு யாருமே கிடையாது. இவர்களால் இன்ன வியாதி என்றே கண்டு பிடிக்கமுடிகிறதில்லை. இரண்டு டாக்டர்கள், அல்லது இரண்டு வைத்தியர்களின் அபிப்பிராயம் ஒருபொழுதும் ஒத்துக் கொள்ளுவதேயில்லை. ஒரு வைத்தியன் 'இரத்தக் கோளாறு' என்றால், இன்னொருத்தன், 'இல்லை, பித்தக் கோளாறு' என்பான். ஒரு டாக்டர் 'ஈரல் வீங்கி விட்டதாக்கும்' என்பான். இன்னொரு டாக்டர், 'அதெல்லாம் இல்லவே யில்லை; சிறுகுடல் அதுபர்தமாக்கும்' என்று சாதிப்பான். இந்த டாக்டர்களோ, வைத்தியர்களோ வியாதியைச் சரியாகப் புரிந்து கொள்ளுவதே கிடையாது. இவர்கள் ஏதோ அனுமானத்தைக் கொண்டு மருந்தைக் கொடுத்து, வியாதியஸ்தனை தயவு தாட்சண்யமின்றி வாட்டி வதக்கி விடுகிறார்கள். இந்த டாக்டர்களின் கையில் நான் மாட்டிக்

கொண்டிருந்தால், வெகு காலத்துக்கு முன்பாகவே அவர்கள் என்னை நரகத்துக்கு அனுப்பி யிருப்பார்கள். நல்ல வேளை! இந்த டாக்டர்களின் கையில் மாட்டிக் கொள்ளாமல் பிழைத்தேன்!—யோகாப்பியாசத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதைச் சரியாகப் புரிந்துகொண்டு சொல்லிக் கொடுக்கக்கூடிய ஒரு மகாத்மாகூட இன்றுவரை எனக்குக் கிடைக்கவில்லை. புத்தகத்தில் எழுதியிருக்கிறபடி செய்தால், ஏதாவது ஒன்றுகொன்று செய்துவிடுமோ என்று பயமாயிருக்கிறது!" என்றார்.

* * *

இங்கே சமாசாரத்தும் வக்கீலும் ஆரோக்கிய விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, அங்கே தோட்டத்தில் உலாவியவாறே, பத்மாவும் ரத்தனும் தங்கள் தங்கள் அந்தரங்க விஷயங்களைப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

"என் கணவரைப் பார்த்த பிறகு, உனக்கு ஆச்சரியமாகப் போயிருக்கலாம்!" என்று சொன்னவாறே ரத்தன் சிரித்தாள்.

பத்மாவுக்கு ஆச்சரியம் மட்டும் ஏற்படவில்லை; பிரமைகூட ஏற்பட்டிருந்தது. "இது வக்கீலுக்கு இரண்டாவது கல்யாணமோ?" என்று கேட்டாள்.

"ஆமாம், இப்பொழுதுதான் கல்யாணம் ஆகி ஐந்து வருஷம் ஆகிறது. இவருடைய முதல் மனைவி இறந்து முப்பத்தைந்து வருஷங்களுக்கு மேலாகிறது. அப்பொழுது இவருக்கு இருபத்தைந்து வயதுதானாம். யார் என்ன சொல்லியும் இவர் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்கவில்லையாம். இவருக்கு ஒரு பிள்ளையிருந்தது. அது நான்கைந்து வருஷங்களுக்கு முன்புதான் இறந்து விட்டது. நல்ல வயது வந்த பிள்ளை இறந்து விட்டதும், இவரைக் கவனிக்க நாதியில்லை. ஆகவே கடைசியில் கல்யாணம் செய்து கொண்டுதான் ஆகவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. எனக்கு அப்பா, அம்மா கிடையாது. மாமாதான் என்னை வளர்த்து வந்தார். இவரிடம் மாமா பணம்தான் வாங்கிக் கொண்டாரோ, இல்லை, இவருடைய பெருந் தன்மையில்தான் மயங்கிவிட்டாரோ எனக்குத் தெரியாது. கடவுள் சித்தம்தான் இப்படி என்பது என் அபிப்பிராயம். நான் இவருக்கு வாழ்க்கைப் பட்டேன். இந்த வீட்டுக்கு வந்த பிறகு, நான் ஒரே பருமனாகப் பருத்துக் கொண்டு வருகிறேன். டாக்டர்களெல்லாரும், 'உனக்குக் குழந்தை பிறக்காது' என்று சொல்லுகிறார்கள். எனக்குக் குழந்தை வேண்டும் என்ற ஆசை கிடையாது. ஆனால் என் கணவருக்குக் குழந்தையில்லாக் குறைதான் பெரிய குறையாக இருக்கிறது. தன் வியாதிக்குக் காரணமே எனக்குக் குழந்தையில்லாமலிருப்பதுதான் என்பது அவருடைய எண்ணம். கடவுள் மனம் வைத்து எனக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தால் இவருடைய வியாதி யெல்லாம் பறந்து விடுமோ, என்னவோ! நானும் எவ்வளவோ இளைக்க வேண்டும் என்றுதான் பார்க்கிறேன். தினம் வெந்நீரில் தொட்டி ஸ்நானம் செய்கிறேன்; ஒரு மைல் இரண்டு மைல் உலாவப் போகிறேன். இன்னும் என்னவெல்லாமோ செய்து பார்த்து விட்டேன்; என் பருமன் குறைவதாயில்லை. எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை!" என்றாள் ரத்தன்.



"வக்கீல் உன்னைக் கோபித்துக் கொள்ளுவது உண்டோ?"

"பேசக் கூடாது. ஒரு வார்த்தைகூட அவருடைய வாயிலிருந்து காரசாரமாக வெளி வருவதில்லை. அவருடைய மனதில் உள்ள கவலையைப் போக்க எனக்கு ஏதாவது வழி தெரிந்தால்தானே! அவரோ அதை வெளிக் காட்டிக் கொள்ளுவதே யில்லை. அந்த மனக் கவலையினால் அவர் வாடி வதங்குகிறார் என்பது மட்டும் நன்றாகத் தெரிகிறது. நான் என்ன செலவு செய்தாலும் அவர் வாய் திறந்து கேட்பதில்லை. நான் சம்பாதிக்கும் பணம் அவ்வளவையும் கொண்டு வந்து என்னிடமே கொடுத்து விடுகிறார். 'இந்தத் தள்ளாத காலத்தில் இப்படிக் கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பானேன்!' என்று நான் சொன்னாலும் அவர் கேட்பதில்லை. அவ



ருக்கு வீட்டில் இருப்புக் கொண்டால்தானே! ஏதோ இரண்டு ரொட்டிகளையோ, மாதுளம் முத்துக்களையோ தின்றுவிட்டுக் கிடக்கிறார். என்னாலான சிசுருஷையை நான் செய்யத்தான் செய்கிறேன். இருந்தாலும் எனக்காக அவர் என்தான் இப்படி உயிரை விடுகிறாரோ, தெரியவில்லை" என்றான் ரத்தன்.

"இப்படிப்பட்ட புருஷர்களைத் தெய்வம் என்றுதான் சொல்ல வேண்டும். எத்தனையோ புருஷர்கள் ஒருத்தி செத்தாளோ இல்லையோ, உடனே மறு கல்யாணம் செய்துகொண்டு விடவில்லையா? முப்பது வருஷம் தனியாக இருப்பதென்றால் அது எல்லாராலும் முடிகிற காரியமா, என்ன?" என்றான் பத்மா.

"அவர் தெய்வம்தான்; சந்தேகமே யில்லை. எப்பொழுதாவது மூத்தாளைப் பற்றிப் பேச்சு வந்தால் அழக்கூட ஆரம்பித்து விடுகிறார். நான் உனக்கு அவருடைய படத்தைக் கூடக் காண்பிக்கிறேன். இவர் பார்ப்பதற்கு இவ்வளவு கம்பீரமாக இருக்கிறாரே, உள்ளூற எவ்வளவு நல்ல குணம் படைத்தவர், தெரியுமா? எத்தனையோ அநாதைகளுக்கும் விதவைகளுக்கும் ஏழைகளுக்கும் பணம் கொடுத்து உதவுகிறார் — ஆமாம், உன்னுடைய இந்தக் கக்கணம் ரொம்ப நன்றாயிருக்கிறதே!" என்றான் ரத்தன்.

"ஆமாம், ரொம்ப உயர்ந்த வேலைக்காரன் செய்ததாக்கும்!" என்றான் பத்மா.

"அப்படியா? எனக்கோ இங்கே யாரையுமே தெரியாது. நகைகளுக்காக வக்கீலுக்குச் சிரமம் கொடுப்பதென்றாலும் மனம் கூசுகிறது. சாதாரண தட்டான்களிடம் கொடுப்பதென்றால் பயமாயிருக்கிறது. எதையாவது கலந்து ஏமாற்றி விட்டால் என்ன செய்வது என்று யோசிக்கிறேன். ஆமாம், உன் கணவரை விட்டு எனக்கு ஒரு ஜோடிக் கக்கணம் செய்து தரச் சொல்லேன்!" என்றான் ரத்தன்.

"அவரைக் கேட்டுச் சொல்லுகிறேன்."

"இன்றைக்கு நீ இங்கே வந்ததில் எனக்குப் பரம திருப்தி. பகல் பூராவும் இங்கே தனியாகத்தான் இருக்கிறேன். எனக்கோ இந்த ஊரில் யாரையும் தெரியாது. இரண்டொருவர் வீட்டுக்குப் போயிருந்தேன். அவர்கள் நடந்துகொண்ட விதம் எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. என்னிடமிருந்து கொஞ்சம் ரூபாய் அவர்கள் கைமாற்றாக வாங்கிக் கொண்டு போனார்கள்; இன்னும்தான் கொடுக்

கிறார்கள். அவர்கள் செய்து கொள்ளும் அலங்காரத்தைப் பார்க்க வேண்டுமே! எனக்குப் 'போதும், போதும்' என்றாகி விட்டது. பத்மா, நீ தினம் அரை மணி நேரம், ஒரு மணி நேரம் நம் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டு இரேன்! நான் கார் அனுப்பி வைக்கிறேன்" என்றான் ரத்தன்.

"கார் அனுப்பிவைக்க வேண்டும் என்பதில்லை. நானே முடிந்த அன்றைக்கெல்லாம் வண்டி வைத்துக்கொண்டு வந்து விடுகிறேன்" என்றாள் பத்மா.

"உன்னை அனுப்புவதற்கே எனக்கு மனம் இல்லை. உன் கணவர் அதிர்ஷ்டசாலிதான். இல்லாவிட்டால் அவர் உன்னை அடைய முடியுமா?"

"இந்தச் சனியனை எதற்கடா கழுத்தில் கட்டிக் கொண்டோம் என்று அவர் எண்ணினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை."

"அவர் ஏன் அப்படி எண்ணப்போகிறார்? அதோ, அவரும் வந்து விட்டார். கங்கணத்தைப் பற்றிச் சற்றுக் கேட்டுச் சொல்லேன்!" என்றான் ரத்தன்.

ரமாகாந்த் கிட்ட நெருங்கி வந்ததும், பத்மா அவனைப் பார்த்து, "ரத்தனுக்கு இதுமாதிரிக் கங்கணம் வேண்டுமாம். சாணு தாஸிடத்தில் சொன்னால் எவ்வளவு நாட்களில் செய்து தருவான்?" என்று கேட்டாள்.

"இதைவிட இன்னும் நல்லது வேண்டுமானாலும் செய்து கொடுக்கச் சொல்லுகிறேன். அதற்கென்ன!" என்றான் ரமாகாந்த்.

"இதற்கு எத்தனை ரூபாய்?" என்று ரத்தன் கேட்டாள்.

"எண்ணூறு!" என்று பத்மா சட்டெனப் பதில் சொன்னாள்.

அவர்கள் வீடு போய்ச் சேரும் பொழுது நன்றாகப் பொழுது போய்விட்டது. ரமேஷ்பாபு ரமாகாந்தின் வரவை எதிர்பார்த்த வண்ணம் அவனுடைய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். பத்மா வண்டியிலிருந்து இறங்கியதும் நேரே உள்ளே போய் விட்டாள். ரமாகாந்த், ரமேஷ்பாபுவின் அருகில் வந்து, "நீங்கள் ரொம்ப நாழிகையாகக் காத்துக் கொண்டிருக்கிறீர்களோ?" என்று கேட்டான்.

"இல்லை, இப்பொழுதுதான் வந்தேன். ஆமாம், நீ வக்கீல் இந்துபூஷணரின் வீட்டுக்குப் போயிருந்தாயா, என்ன?" என்று கேட்டார் ரமேஷ்பாபு.

"ஆமாம், மூன்று ரூபாய்க்குப் பிடித்தது சனியன்!"

"அப்படியெல்லாம் சொல்லாதே! பெரிய மனிதர்களைத் தெரிந்து வைத்துக் கொள்வது எப்பொழுதுமே நல்லது. ஒரு நாள் இல்லா விட்டால் ஒரு நாள் நமக்கு அவர்களுடைய ஒத்தாசை தேவையாயிருக்கும். நீயும் அவர்களை ஒரு நாள் 'டீ'க்குக் கூப்பிடுவதுதானே!"

"வருகிற ஞாயிற்றுக்கிழமை வரும்படி சொல்லியிருக்கிறேன்."

"நீ வரச் சொன்னால் நான் வேண்டுமானாலும் வருகிறேன். உனக்குத் தெரியுமோ, இல்லையோ? வக்கீலுக்கு ஒரு தம்பி இஞ்ஜினியராக இருக்கிறார். என் மைத்துனன் ஒருத்தன் ரொம்ப நாட்களாக வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறான். வக்கீல் தன் தம்பியிடம் ஒரு வார்த்தை சொன்னாரானால் அவனுக்கு வேலை கிடைத்துவிடும். நீ அவரை மட்டும் எனக்கு அறிமுகம் செய்து வைத்துவிடு. பாக்கிக் காரியங்களை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். 'பார்ட்டி'க்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் என் பொறுப்பில் விட்டுவிடு. நான் அந்த மைத்துனன் தலையிலேயே சகல பொறுப்பையும் சுமத்தி விடுகிறேன். வேலை வேண்டுமென்றால், தானாக முதல் தரமான ஏற்பாடு செய்கிறான்! என்ன, நான் சொல்லுவது?" என்றார் ரமேஷ்பாபு.

"அப்படியானால் 'குஷி'தான்! 'என்னடா செய்வது' என்று நான் ரொம்பவும் கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன்......"

"கவலைப்படுவானேன்? வேலை வேண்டுமென்றால் 'இந்த ஏற்பாட்டையெல்லாம் செய்' என்று சொல்லி அந்தப் பயலின் தலையில் கட்டிவிட்டால் போயிற்று!"

"ஆமாம், இப்பொழுதுதானே இரண்டு மூன்று மாசத்துக்கு முன்னால் மைத்துனனுக்கு வேலை செய்து வைத்தீர்கள்?"

"அது வேறொருத்தன்! மொத்தம் ஏழு உருப்படிகள் அல்லவா? இன்னும் ஆறு பாக்கியிருக்கிறது! — சற்று உட்காரு; வேண்டிய சாமான்களுக்கு ஒரு 'லிஸ்ட்' தயார் செய்து கொள்ளுவோம். இன்றைக்கே ஆரம்பித்தால்தான் அதிக சிரமமில்லாமல் எல்லாவற்றையும் சேகரிக்க முடியும். மொத்தம் எத்தனை பேரை விருந்துக்கு அழைப்பதாக உத்தேசம்?"

"வக்கீலும் வக்கீல் சம்சாரமும்தான். அதிகமாகக் கூட்டம் கூட்டுவானேன்?"

"அதுதான் சரி; அதிகக் கூட்டம் கூட்டினால் நம்மால் சமாளிக்கக்கூட முடியாது. நமக்கு 'அம்மா'வின் தயவு இருந்தால் போதுமானது. வெறும் கூட்டத்தைக் கூட்டி என்ன பிரயோசனம்?" என்றார் ரமேஷ்பாபு.

பிறகு இருவரும் சேர்ந்து, வேண்டிய சாமான்களுக்கு ஒரு 'லிஸ்ட்' தயார் செய்து கொண்டனர். ரமேஷ்பாபு மறுநாளைக்கே சாமான்கள் சேகரிக்க முற்பட்டு விட்டார். அவர் எத்தனையோ பெரிய பெரிய இடங்களைப் பார்த்தவர். ஆகையால் வீட்டு ஜோடனைக்கு வேண்டிய எல்லா சாமான்களையும் சேகரித்துவிட்டார்.


தயாநாத பாபுவும் இந்த ஏற்பாடுகளில் மிகவும் ஒத்துழைத்தார். சாமான்களை ஒழுங்காக வைக்கவேண்டிய பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. 'எந்தப் பூந்தொட்டியை எங்கே வைப்பது, எந்தப் படத்தை எங்கே மாட்டுவது, எந்தக் கம்பளத்தை எங்கே விரிப்பது?' என்பது போன்ற பிரச்னைகளை மூவரும் சேர்ந்து மணிக் கணக்காக ஆலோசிப்பார்கள். ஆபீஸ் போவதற்கு முன்பும், ஆபீஸிலிருந்து திரும்பி வந்த பிறகும் மூவரும் இதே வேலையில்தான் தங்கள் தங்கள் பொழுதைச் செலவிடுவார்கள்.

ஒரு நாள் 'அறையின் எந்தப் புறத்தில் நிலைக்கண்ணாடியை வைப்பது?' என்பது பற்றி மூவருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு விட்டது.

"இந்த அறையில் நிலைக்கண்ணாடிக்கே வேலையில்லை. அதைப் பின்பக்கத்து அறையில்தான் வைக்கவேண்டும்" என்பது தயாநாத பாபுவின் கட்சி. ரமேஷ் பாபுவோ அதை ஆட்சேபித்தார். ரமாநாத் யாருடைய கட்சியையும் எடுத்துப் பேச முடியாமல் தவித்தான். அவனுக்கு மௌனம் சாதிப்பதைத் தவிர வேறு வழியே புலப்படவில்லை.

"நான் எத்தனையோ இங்கிலீஷ்காரர்களின் வீட்டில் 'டிராயிங் ரூமை'ப் பார்த்திருக்கிறேன். எங்குமே கண்ணாடியைப் பார்த்ததில்லை. கண்ணாடியை அவர்கள் 'டிரஸிங் ரூ'மில்தான் வைக்கிறார்கள். இங்கே கொண்டுவைத்து கண்ணாடியை வைப்பது கொஞ்சம் கூட நன்றாயிராது!" என்றார் தயாநாத பாபு.

"உங்களைப்போல எத்தனையோ இங்கிலீஷ்காரர்களின் வீட்டைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லைதான். இருந்தாலும் இரண்டு மூன்று பேர்வழிகளின் வீட்டைப் பார்த்திருக்கிறேன்; கண்ணாடி வைத்திருக்கிறார்கள். அது கிடக்கட்டும், சின்னச் சின்ன விஷயங்களில்கூட நாம் இங்கிலீஷ்காரர்களைக் கூவி உழைப்பானேன்! நாம் இங்கிலீஷ்காரர்களா, அதற்கு? இந்தியர்கள்தானே! எத்தனையோ இந்தியச் சீமான்கள் வீட்டில் பெரிய பெரிய நிலைக் கண்ணாடிகள் வைத்திருக்கவில்லையா? எதற்காக நம் நாட்டு இரண்டுங்கெட்டான் துரைகளை உதாரணமாக எடுத்துக் கொள்ளுகிறீர்கள்? நடை, உடை, பாவனையில், அறையை அலங்கரிப்பதில், பேச்சில், குடியில், சைனுக் கோப்பையில், அதாவது வெளிப் பகட்டுக்கா



"என்னங்க இது! இந்தத் தெருவிலே குழாய்த் தண்ணிக்கு இப்படி ரெண்டு பக்கமும் 'க்யூ'விலே நிக்கிறீங்களே? இப்படி நின்னா சண்டையல்ல வந்துடும்!"

"அதெல்லாம் ஒண்ணும் வராதுங்க! அந்தப் பால்காரங்கதான் தண்ணிக்காக நிக்கிறாங்க; இவங்க அவங்ககிட்ட பால் வாங்க நிக்கிறாங்க!"

சகல விஷயங்களிலும் நம்மவர்கள் இங்கிலீஷ்காரர்களைப் பின்பற்றுகிறார்களே தவிர, மற்ற விஷயங்களில் அவர்கள் கால் தூசிக்குக்கூடச் சமானமாவதில்லை. எந்த குணங்களின் காரணமாக இங்கிலீஷ்காரர்கள் இங்கிலீஷ்காரர்களாக இருக்கிறார்களோ, எதன் காரணமாக அவர்கள் உலகையே ஆளுகிறார்களோ, அந்த குணங்கள் நம் நாட்டு மக்களுக்கு உதிக்கவில்லை. இந்தக் கிழட்டு வயதில் உங்களுக்கு இங்கிலீஷ்காரர்களின் மோகம் எதற்குத்தான் பிடித்ததோ!" என்றார் ரமேஷ்பாபு.

தயாநாத பாபு ஆங்கிலேயர்களைக் காப்பியடிப்பதையே சிறிதும் விரும்பாதவர். இந்தத் தேநீர் விருந்துகூட அவருக்குப் பிடிக்கவில்லைதான். இருந்தாலும், 'ஏதோ நாலைந்து பெரிய மனிதர்களுடைய சகவாசம் கிட்டுமே!' என்ற ஒரே ஒரு திருப்திதான் அவருக்கு. அவர் தம் வாழ்நாளில் ஒரு நாளாவது 'கோட்டு' அணிந்ததில்லை; கோப்பையில் தேநீர் அருந்தியதில்லை. இருந்தாலும் தன் கட்சியை எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் வந்துவிட்டது. ஆகையால், "இந்தியச் சீமான்கள் வீட்டில் மேஜை நாற்காலி போடுவதில்லை. விரிப்புத்தான் விரித்திருப்பார்கள். நீங்கள் மேஜையையும் நாற்காலியையும் கொண்டுவந்து அடைத்து ஆங்கிலேய நாகரிகப்படி செய்துவிட்டீர்கள். அப்புறம் 'கண்ணாடி வேண்டும்' என்பதற்காக இந்தியச் சீமான்களை உதாரணமாக எடுத்துக் காட்டுகிறீர்கள். ஒன்று, இந்தியப் பண்பாட்டை அனுசரியுங்கள்; இல்லாவிட்டால் மேனாட்டு நாகரிக முறைப்படியே எல்லாவற்றையும் நடத்துங்கள். 'ஆற்றில் பாதி, சேற்றில் பாதி' என்பார்களே, அப்படி இரண்டுங்கெட்டான் முறையை மட்டும் அனுசரிக்கிறீர்கள். கோட்டையும் சூட்டையும் போட்டுக்கொண்டு, ஜமீன்தார்களின் ஜரிகைக் குல்லாவையும் போட்டுக் கொண்டால் நன்றாயிருக்குமா? நீங்கள் சொல்லுவது அதுமாதிரிதான் இருக்கிறது!" என்றார் தயாநாதபாபு.

'தயாநாதபாபு பேச வகை யறியாமல் வாய் அடைத்துப் போய்விடுவார்' என்று ரமேஷ்பாபு எண்ணினார். ஆனால் தயாநாதபாபுவின் இந்தப் பதிலைக் கேட்டதும், ரமேஷ்பாபுவுக்கு 'என்ன பதில் சொல்லுவது' என்றே புரியவில்லை. அவர் சற்றுத் தயங்கி, "ஆமாம், நீங்கள் இங்கிலீஷ்காரன் வீட்டில் சிலைக் கண்ணாடியையே பார்த்ததில்லையா, என்ன? எங்கே, உங்களுக்குத் தெரிந்த நாலைந்து ஆசாமிகளைச் சொல்லுங்கள், பார்ப்போம்! அந்தக் 'கிரண்டா' ஹெட் கிளார்க்கைத் தவிர நீங்கள் வேறு யார் வீட்டில் காலடி எடுத்து வைத்திருக்கப் போகிறீர்கள்!" என்றார்.

"நீங்கள் அவனைக் கிரண்டா, சம்ரோஷியன், பிக்பிஷி என்று என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டு போங்கள். நிறத்தைத் தவிர அவன் எந்த விஷயத்திலும் இங்கிலீஷ்காரனுக்குக் குறைந்தவன் அல்ல என்பது என் அபிப்பிராயம்" என்றார் தயாநாதபாபு.

ரமேஷ்பாபு பதில் சொல்ல வாய் எடுக்கு முன்னரே, வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ரத்தன் இறங்கி வராந்தாவுக்குள் வந்தான். அவனைக் கண்ட மூன்றுபேரும் அவசர அவசரமாக வெளியே வந்தார்கள். ரமாநாத்துக்கு திடுதிப்பென்று பூஜை வேளையில் கரடி புகுந்தாற்போல ரத்தன் அங்கே வந்தது சிறிதும் பிடிக்கவில்லை. அவன் தன் அறைக்குள் வராமல் இருக்க வேண்டுமே! வந்தால் நம் குட்டு வெளிப்பட்டு விடுமே! என்று அவன் உள்ளூற நடுங்கிக் கொண்டிருந்தான். இருந்தாலும் வெளிக்கு அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனருகில் சென்று கை குலுக்கி வரவேற்று, "வாருங்கள், வாருங்கள். இவர்தான் என் தகப்பனார். இவர் என் சிநேகிதர் ரமேஷ்பாபு!" என்று அறிமுகப்படுத்தினான். ஆனால் அவ்விருவரும் கை குலுக்கக் கையை நீட்டவும் இல்லை; தங்கள் இடத்திலிருந்து நகரவும் இல்லை. தாம் நின்ற இடத்திலேயே பிரமித்து நின்றனர். ரத்தனும் அவர்களுடன் கை குலுக்கவேண்டும் என்று எண்ணவில்லை. அவன் தூரத்தில் இருந்தபடியே வணக்கம் செலுத்திவிட்டு, ரமாநாத்திடம், "இல்லை, எனக்கு உட்காரப் பொழுது இல்லை. உங்களிடம் ஒரு முக்கியமான சமாசாரம் சொல்ல வேண்டும். அதற்காகத்தான் வந்தேன்" என்று சொல்லி, ரமாநாத்துடன் மோட்டார் நின்ற பக்கம் திரும்பினான். பிறகு மெதுவான குரலில், "நீங்கள் நகைக் கடைக்காரனிடம் சொல்லிவிட்டீர்களா?" என்று கேட்டான்.

ரமாநாத் சற்றும் தயங்காமல், "அப்பொழுதே சொல்லி விட்டேனே!" என்றான்.

"அன்றைக்கு 'என்னால் இப்பொழுது பணம் கொடுக்க முடியாது' என்று சொன்

னேனல்லவா! உங்களுக்குச் சிரமமாயிருக்தால் என்ன செய்வது என்று எண்ணிப் பணம் தருவித்துவிட்டேன். எண்ணூறு ரூபாய்தானே தரவேண்டும்?" என்று கேட்டான் ரத்தன்.

கங்கணத்தின் விலை எண்ணூறு ரூபாய் என்று பத்மா அவனிடம் சொல்லியிருக்தாள். ரமாகாந்த் நினைத்திருந்தால் அவனிடமிருந்து அந்த எண்ணூறு ரூபாயையும் வாங்கிக் கொண்டிருக்கலாம். ஆனால் அவனுடைய வெகுளித்தனத்தையும் நம்பிக்கையையும் கண்டு, அவ்வளவு ரூபாயை வாங்கிக் கொள்ள அவனுடைய மனமே கூசிற்று. களங்கமற்ற, தாராள மனப்பான்மையுடைய ஒரு பெண்ணை ஏமாற்ற அவனுடைய மனம் துணியவில்லை. அவன் கொள்ளை லாபம் அடிக்கும் வியாபாரிகளிடம் பணம் பறிக்கத் தவறியதில்லை. அவர்களிடம் அவ்வாறு நடந்து கொள்வதில் பாவம் ஒன்றும் சம்பவிக்காது என்று அவன் திடமாக நம்பினான். ஆனால் ஒரு பெண்ணை ஏமாற்றிப் பணம் பறிக்க அவனுடைய மனம் சிறிதும் இடம் கொடுக்கவில்லை. ஆகையால் அவன் சற்றுச் சகோசத்துடன், "பத்மா கங்கணத்தின் விலை எண்ணூறு ரூபாய் என்று சொன்னாளா, என்ன! அவள் தெரியாமல் சொல்லியிருப்பாள். அவனுடைய கங்கணம் அறுநூறு ரூபாய் பெறுமான முள்ளதுதான். உங்களுக்கு வேண்டுமானால் எண்ணூறு ரூபாய்க் கங்கணமே செய்து தரச் சொல்லுகிறேன்!" என்றான்.

"வேண்டாம், வேண்டாம். எனக்கு அது தான் பிடித்திருக்கிறது. நீங்கள் அறுநூறு ரூபாய்க் கங்கணமே செய்து தரச் சொல்லுங்கள்" என்று சொல்லி ரத்தன் மோட்டாரில் இருந்த தன் பையிலிருந்து ஆறு நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து ரமாகாந்திடம் கொடுத்தாள்.

"பணத்துக்கென்ன அவசரம்? நகை செய்து வந்த பிறகு கொடுத்தால் போதுமே!" என்றான் ரமாகாந்த்.

"இல்லை, என்னிடமிருந்தால் செலவழிந்து விடும். இருக்கும்பொழுதே கொடுத்து விட்டால் அப்புறம் கவலை இல்லை, பாருங்கள்!' என்று சொல்லியவாறே ரத்தன் மோட்டாரில் ஏறி உட்கார்ந்தாள். காரும் வெகு வேகமாக மறைந்தது.

(தொடரும்)



என்ன வேலை?

கண்ணன்:—அடே! ராமு, கல்யாணமானவுடன் உன் மாமனார் வேலை பார்த்துத் தருவார் என்று சொன்னாயே! ஏதாவது செய்திருக்கிறாரா?

ராமு:—ஊம்......செய்திருக்கிறார்.

கண்ணன்:—என்ன வேலை?

ராமு:—அவருடைய இரண்டாவது பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகிற வேலை!

—என். என். ஆர்.

★

பாஸாச்சு!

பையன்:—அத்தை! பி. ஏ. பரீட்சையிலே எனக்கு முதல் க்ளாஸிலே பாஸாயிருக்கு!

அத்தை:—என்னமோப்பா! நீ ரப்பகலாக விழுந்து விழுந்து படித்ததற்கு இந்த மட்டிலும் ஒரு க்ளாஸாவது பாஸாச்சே......ரொம்ப சந்தோஷம்!

—எஸ். கோமளம்.

★

நல்ல பதில்

நோயாளி:—என்ன ஸார்! நீங்கள் கொடுத்திருக்கிற மருந்தைக் கண்ணில் ஊற்றினால் எரியும் என்று சொல்லுகிறீர்களே, மிகவும் கஷ்டமாக இருக்குமோ?

கண் டாக்டர்:—ரொம்பத்தான் ஸார்! கண் வலி குணமாக வேண்டுமென்றால் கண்ணை மூடிக் கொண்டு ஊற்றிக் கொள்ள வேண்டியதுதானே!

—எம். எஸ். மணி.

★

தாங்க முடியாதுதான்!

முதல்வர் (புதிதாகப் பங்களாவுக்குக் குடிவந்தவர்):—ஸார், இந்தப் பக்கத்தில் நாய்கள் அதிகமோ? ஓயாமல் குரைத்துத் தொந்தரவு செய்யுமோ?

நண்பர்:—அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை.

முதல்வர்:— ரொம்ப நல்லதாகப் போயிற்று. ஏனென்றால் என்னிடம் இரண்டு நாய்கள் இருக்கின்றன. அவை விடாமல் குரைக்கும். அத்துடன் இங்கேயும் குரைக்கும் நாய்கள் இருந்தால் என்னால் தாங்கமுடியாது.

—எஸ். எஸ்.

★

நாராளம்!

மனைவி:—என் தாயாருக்கு இரண்டு ரூபாய் வேண்டுமாம்......

புருஷன் (வெறுப்புடன்):—என்னிடம் நயா பைசா கூடக் கிடையாது. ரூபாய் எதற்கு?

மனைவி:—அம்மா ஊருக்குப் போக ரயில் சார்ஜுக்கு!

புருஷன்:—ஊருக்கா! அப்படியானால் இந்தா, நாலு ரூபாய்!

—என். என். ராஜன்.



படித்துப் பார் !

இக்பால் கவி அமுதம்

[எழுதியவர் : ஆர். பி. எம். கனி, பி. ஏ., பி. எல் ; பிரசுரம் : வளர்பிறை பதிப்பகம், காரைக்கால் : விலை : ரூ. 1—8—0.]

முகம்மது இக்பால் உருது பாஷையிலே புகழ் பெற்ற கவிஞர். "ஸாரே ஜஹாங்ஸே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா" என்ற அவருடைய கவிதை ஹிந்தி முதலிய நம் நாட்டு பாஷைகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டு எல்லோராலும் பாடப்பட்டு வருகிறது. அவர் உருது பாஷையிலே எண்ணிறந்த கவிதைகளையும், 'ஜாவீதுநாமா' என்ற பெருங் காவியத்தையும் எழுதியிருக்கிறார். இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் இக்பாலுடைய கவிதைகளைக் 'கலை' 'பெண்கள்' என்பன போன்ற தலைப்புக்களிலே பல பிரிவுகளாகப் பிரித்து, அவற்றிலுள்ள கவி நயத்தையும் சிறப்பையும் ஆராய்ந்திருக்கிறார்.

'இக்பால்' என்ற வார்த்தைக்கு உருதுவிலே 'புகழ்' என்று பொருள். முகம்மது இக்பால் சிறு குழந்தையாயிருந்தபோது, ஒரு நாள் பள்ளிக்கூடத்துக்குக் காலதாமதமாக வந்தாராம். வாத்தியார் அவரைப் பார்த்து, "ஏன் இவ்வளவு தாமதமாக வந்தாய்?" என்று கேட்டாராம். அதற்கு இக்பால், "நான் என்ன செய்யட்டும்! இக்பால் (புகழ்) எப்போதும் தாமதமாகத்தான் வரும்" என்றாராம்.

புத்தகம் எளிய நடையில் ரசமாக அமைந்திருக்கிறது.

ஆங்கில-தமிழ் அகராதி

[ஆக்கியோன் : வித்துவான் என். முத்து ஐயங்கார்; பிரசுரம் : அம்பிகா பிரதர்ஸ், மயிலாப்பூர், சென்னை; விலை : ரூ. 5—0—0.]

என்னதான் ஆங்கிலேயர்கள் அடியோடு நம் நாட்டை விட்டுப் போய் விட்டாலும், ஆங்கில பாஷையும் அவர்களோடு போய் விடாது என்பது இந்நூலாசிரியரின் அபிப்பிராயம் போலும். அதனால்தானோ என்னவோ, மிக்க சிரமம் எடுத்துக் கொண்டு ஆசிரியர் இந்த ஆங்கில - தமிழ் அகராதியை வெளியிட்டிருக்கிறார். பள்ளி மாணவர்களை நம்பி வெளியாகியிருக்கும் இந்நூல், பள்ளி மாணவர்கள் அல்லாதாருக்கும் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

சுதந்திரச் சுழல்

[ஆசிரியர் : என். ஆர். பத்மநாபன் ; பிரசுரம் : அருள் நிலையம், ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா ; விலை : ரூ. 5—0—0.]

நேதாஜி சுபாஷ்சந்திர போஸைப் பற்றி எத்தனை புத்தகங்கள் வந்தால்தான் என்ன? அவை எத்தனை ரூபாய் விலையில் வந்தால்தான் என்ன? சொன்ன விஷயத்தையே திருப்பித் திருப்பிச் சொன்னாலுங்கூடத்தான் என்ன? போஸின் தேச பக்தியிலும், தியாக புத்தியிலும் மூழ்கியுள்ள தமிழ் மக்களுக்குச் சலிப்புத் தட்டவா போகிறது!


நேதாஜியின் வாழ்க்கையைப் பற்றிச் சமீபத்திலே வெளி வந்திருக்கும் இந்த நூலிலே, போஸின் குழந்தைப் பருவ வாழ்க்கை முதல் அவர் இந்தியாவிலிருந்து தப்பியோடி 'ஆஸாத் ஹிந்த் சேனை' அமைத்து, முடிவில் விமான விபத்துக்குள்ளாகி அகால மரணமடைந்தது வரை எல்லா விஷயங்களையும் இந்த நூலாசிரியர் தெளிவாக எழுதியிருக்கிறார். போஸின் வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு நல்ல புத்தகம்.

பூச்சூட்டல்

[ஆசிரியர் : வி. சு. திருநாவுக்கரசு ; பிரசுரம் : ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சி; விலை : ரூ. 2—0—0.]

நினைக்கிற்கும் எட்டாத நெடுங்காலத்துக்கு முன்பே தமிழர்கள் பண்பட்ட நாகரிக மக்களாக வாழ்ந்திருக்கின்றனர். தமிழன் கலை பயின்றான் ; காவியம் இயற்றினான் ; கன்னியரோடு காதல் புரிந்தான் ; செங்கோல் செலுத்தி அரசு புரிந்தான் ; ஆழ் கடலில் பிறந்த நன்முத்தை எடுத்துக்கொண்டு, அலை கடல் கடந்து சென்று அன்னிய நாட்டுடன் வர்த்தகம் செய்தான். அத்தகைய பண்டைத் தமிழரின் வாழ்க்கையையும் சமீபத்தில் வாழ்ந்திருந்த சில புலவர் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளையும் அடிப்படையாகக் கொண்ட பதினெட்டுக் கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன இந்நூலில்.

"இத்தமிழ்த் தென்றலில், சொற்கள், இனிய தித்திக்கும் சொற்கள், இதய சிங்காரமாகவே சிறகடித்து வருகின்றன" என்று பதிப்புரையில் கூறப்பட்டிருக்கிறது. நாமும் அதை ஆமோதிக்கிறோம்.



"என்ன, ஸார்! இப்படி ஓயாமல் 'ஒன்ஸ் மோர்' கேட்டுண்டிருக்கேளே! அவன் பாட்டு அவ்வளவு நன்னாவா யிருக்கு!"

"அதற்கில்லே, ஸார்! அப்படி 'ஒன்ஸ் மோர்' கேட்டு வைத்தால், அந்தப் பாட்டை அவன் திருப்பித் திருப்பிப் பாடியாவது நன்னாப் பாடுவதற்குப் பழகிக் கொள்ளட்டு மேன்னு பார்க்கிறேன்!"

சென்னை

சாகரிலும் - கிரௌனிலும்

19-7-1947 அன்று மகத்தான ஆரம்பம்!

தினசரி 3 காட்சிகள்

20-7-1947 ஞாயிறு அன்று காலை 10 மணிக்கு
பிரத்தியேக ஸ்பெஷல் காட்சி உண்டு



"கொல்ல பாமா"

*

கிருஷ்ணவேணி, அஞ்சலிதேவி, ரகுராமய்யா
முதலியோர் நடித்தது

பயனீர் & ஜெயகுமார் பிக்சர்ஸ் ரிலீஸ்



அவரது முடக்கு வாதத்திற்கு வேறு நிவர்த்தியே இல்லை

ஒருமுறை க்ருஷன் சாப்பிட ஆரம்பிக்கும் வரையில்

மிக நந்நம்பிக்கை உடைய ஸ்திரீயாக பாவிக்கிருள்

க்ருஷன் அவருக்கு என்ன நன்மை செய்தது என்பதை நாம் அறிய வேண்டுமென்று அவள் நினைத்தாள். ஆனால் முடக்கு வாதத்தினால் அவதியுறுபவர்களுக்கும் விஷயம் தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காக அந்த அம்மையாரின் கடிதத்தைக் கீழே பிரசுரிக்கிறோம்:—

"க்ருஷன் எனக்கு சாதித்தது என்ன என்று நீங்கள் அறிவது அவசியமென நினைத்தேன். நான் முடக்கு வாதத்தினால் பெரிதும் கஷ்டப்பட்டவள். எவ்வளவோ செலவு செய்து எத்தனையோ வைத்தியங்கள் செய்து பார்த்தேன். உண்மையைக் கூற வேண்டுமானால்—க்ருஷன் ஒன்றேதான் எனக்கு நிவர்த்தியளித்தது. முன்பு என்னால் நகரக்கூட முடியவில்லை. ஆனால் ஒருமுறை க்ருஷன் சாப்பிட்ட பின்பு—நான் முழுதும் மாறிவிட்டேன். க்ருஷன் எனக்கு அளித்த நிவர்த்தியைக் குறித்து என் நண்பர்கள் யாவருக்கும் கூறுவேன்."—(மிஸஸ்) ஏ. ஏ.

முடக்கு வாதத்திற்கு வைத்தியம் செய்ய முதன் முதலில் குடலையும் மூத்திர கோசத்தையும் சுத்தப்படுத்த வேண்டியது. மேற்படி வேலையை மிகவும் சுலபமாகவும், ஜாக்கிரதையாகவும் செய்யக் கூடிய இரண்டு சக்திகளும் ஒன்றாக க்ருஷனில் இருக்கிறது.

அபாயகரமான அமிலங்களும் விஷங்களும் மூத்திர கோசத்தின் மூலம் அகற்றப்படுகின்றன. குடல் சரியாகவும் ஒழுங்காகவும் வேலை செய்யத் தூண்டப்படுகிறது. அதன் பலன்—முடக்கு வாத வலி அகன்று உடலில் யௌவன விறுவிறுப்பு, புத்துயிர் பெற்ற உணர்ச்சியேற்படுகிறது. க்ருஷன் சாப்பிட இன்றே ஆரம்பியுங்கள். முதலில் சில தடவைகள் சாப்பிட்ட பிறகு உங்களுள் விசித்திரமான மாறுதல் ஏற்படுவதைக் காண்பீர்கள். எல்லா கெமிஸ்டுகளும் வியாபாரிகளும் க்ருஷன் பாட்டில் ஒன்றுக்கு ரூ. 1-10-0 விதம் விற்பனை செய்கிறார்கள்.

உமது மனைவி ஸயன்ஸ் படித்-தவளாக இருக்கமுடியுமா?



உமது வீட்டில் சமயல் செய்கிறவர்கள் சமைக்கிறவைகளில் இவ்வளவு சத்துப்பொருள்கள் தேவை என்று இடை போட்டு சமைத்தால் தானே நீங்கள் சாப்பிடும் உணவில் வேண்டிய எல்லா சத்துப் பொருள்களும் இருக்கின்றன என்று தெரிந்து கொள்ள முடியும்?

உணவுப் பொருள்களின் குறையான சத்துக்களை சரிசெய்து தேகாரோக்யம் பெறுவதற்கு. பலம் தந்து லேசாக ஜீரணிக்கும் மெக்லெக்ஸ் வில்லைகளைச்சாப்பிடுதல் மிகவும் சுலபமான வழியாகும்.

ஏராளமான விட்டமின் சத்துள்ள மெக்லெக்ஸ் வில்லைகளால் எல்லாவித உணவுகளின் குறைகளை நீக்கி சமசத்துள்ளவைகளாகச்செய்து கொள்ள முடிகிறது. அத்துடன் உடலை வளர்க்கக் கூடிய போஷிப்பை அளிக்கும் சத்தான பொருள்களும் இருக்கின்றன.

மெக்லெக்
நியூட்ரிமெண்ட்ஸ்

உணவில் குறையாய் உள்ள உணவுச்சத்துக்களை அளிப்பவை

விவரமான செய்திகளுக்கு கீழ்க்கண்டவர்களுக்கு எழுதுங்கள்.

தி மெக்லெக் நியூட்ரிமென்ட்ஸ் அன் பார்மஸூடிகல்ஸ் லிட்

99-A, ஆர்மீனியன் தெரு, ஜி. டி. மதராஸ்

ADARTS MNP. 46.B, Tamil

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



KALKI ஜூலை ௨0, 1947 4 அணா

REGD. NO. M. 4392

License No. 18
Licensed to post without prepayment

